PUBLIC LIBRARY
JAFFNA

ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

28.01.2015 - மலர் 11, இதழ் 48



நாடுகளின்
பாரம்பரிய
கலைகள்



இலங்கையின்
தேசிய
சின்னங்கள்

விலை
ரூபா 15/-





## புதிய வருடத்தில் புதிய திட்டங்களை வகுப்போம்...



## பேய்கள் உள்ளனவா...?


அறிவியல்
கருத்துக்கள்

## மலை ஏறும் வழிமுறைகள்




மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1. இங்கிருப்பவை;


1. சதுரங்கள் 2. வட்டங்கள் 3. செவ்வகங்கள்

2. அவை எத்தனை உள்ளன?

.............................................

3. A யிலிருந்து B வரை - B யிலிருந்து C வரை - C யிலிருந்து D வரை - D யிலிருந்து A வரை ஒரு கோட்டினால் இணைத்தால், கிடைக்கும் வடிவம் யாது?

1. நீள்வட்டம் 2. சதுரம் 3. செவ்வகம்




1. எனது பெயர் ஜெனி. எனது சகோதரனின் பெயர் யாது? ..............................................

2. எனது அப்பாவின் பெயர் என்ன? ..............................................

3. எனது பாட்டியின் பெயர் என்ன? ..............................................

4. எனது சித்தப்பாவின் பிள்ளைகளின் பெயர்களைத் தருக.

..............................................

5. என்ட்றூவின் அம்மாவின் பெயர் யாது?

..............................................

6. எனது தாத்தாவின் பெயரைத் தருக.

..............................................

-ஜீநு




1. படத்தில் காணப்படும் ஏதேனும் 4 பொருட்களின் பெயர்களை எழுதுக.

1. ..............................................
2. ..............................................
3. ..............................................
4. ..............................................

2. ஜன்னலுக்கு வெளியே காற்றில் மிதந்து கொண்டிருப்பது என்ன?

1. வண்டு 2. பட்டம் 3. பலூன்

3. கட்டிலின் மேலே அமர்ந்திருப்பது;

1. பொம்மை 2. கிளி 3. வாத்து

4. தரையில் இருக்கும் பொருட்களில் நிறந்தீட்டப் பயன்படும் பொருள் யாது?

..............................................



## ஈரநில குறுக்கெழுத்துப் போட்டி - 05 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ப | ற | 2 வை | ■ | 3 வே | ■ |
| வ | ■ | 4 க | ரு | ம் | பு |
| ள | ■ | றை | ■ | பு | ■ |
| ப் | ■ | ■ | 5 கு | ■ | 6 ஜூ |
| 7 பா | சி | ■ | ம | ■ | ன் |
| றை | ■ | 8 ம | ண | ல் | ■ |

### போட்டி: 05 வெற்றியாளர்கள்

- எம்.பஸால், அலுவிஹார.
- பா.மதுர்ஷனா, லிந்துலை.
- எஃப்.ரஃப்அத் ஆரா, புத்தளம்.
- ரா.சலோஜன், கணேசபுரம்.
- ச.தனார்த்தனன், கெந்தகொள்ள.
- எஸ்.அக்தர் பர்விஸ், சாய்ந்தமருது-01.
- எம்.சப்ரின், வெளிமடை.
- ம.கிருபா, தொல்புரம்.
- பி.கோபிகாஷன், நுவரெலியா.
- எஃப்.இக்ரா நௌபர், தொட்டவத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652




# பயணிகளின் உயிர்களைக் காப்பாற்றிய விமானியின் திறமை



கடந்த சில மாதங்களாக உலகின் பல்வேறு பகுதிகளிலும் நிகழ்ந்த விமான விபத்துக்கள் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இத்தகைய துரதிர்ஷ்டவசமான விமான விபத்துக்கள் இடம்பெற்று வந்த காலகட்டத்தில் தான், விமானி ஒருவரின் சமயோசித செயற்பாட்டினால் 447 பயணிகளினதும் 15 விமானச் சிப்பந்திகளினதும் உயிர்கள் காக்கப்பட்ட சம்பவம் குறித்தும் அறியக்கிடைக்கின்றது. இந்த சம்பவம் கடந்த டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

## விமான சக்கரத் தொகுதியில் கோளாறு

அமெரிக்காவின் வேர்ஜின் அட்லாண்டிக் விமான



டேவிட் வில்லியம்ஸ்

சேவைக்குரிய போயிங் விமானமொன்றே இந்த நெருக்கடி நிலையை எதிர்கொண்டது. இந்த விமானம் பிரித்தானியாவின் லண்டன் நகரில் இருந்து அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரினை நோக்கி சேவையில் ஈடுபடும் விமானமாகும். விமானம் பயணிக்கத் தொடங்கிய சில மணித்தியாலங்களின் பின்னர், விமானிகள் அறையில் இருந்து அபாய சமிக்ஞை வெளிப்பாடுகளான எச்சரிக்கை ஒலியுடன்கூடிய சிவப்பு விளக்கு எரியத் தொடங்கியது. விமானத்தின் நான்கு சக்கரத் தொகுதிகளில் ஒரு சக்கரத் தொகுதியில் ஏற்பட்ட கோளாறே இதற்குரிய காரணமாகும்.

## துணிச்சலான செயற்பாடு

விமானத்தில் இருந்த 447 பயணிகளில் சிறுவர்களும் குழந்தைகளும் அடங்கியிருந்தனர். இந்த விமானத்தின் தலைமை விமானியாக கடமையாற்றியவர் 47 வயதான டேவிட் வில்லியம்ஸ் என்பவர் ஆவார். அவர் விமானத்தினை உடனடியாக தரையிறக்க வேண்டும் என்று தீர்மானித்தார். அது ஒருவித துணிச்சலான தீர்மானமாக இருந்தது. அத்துடன், தாம் எதிர்கொண்டுள்ள அவசர நிலைமை குறித்து உடனடியாக பிரித்தானிய விமானக் கட்டுப்பாட்டு அறைக்கு அறிவித்தார். அதனைத் தொடர்ந்து அருகில் இருந்த கெட்விக் விமான நிலையத்தில் குறித்த விமானத்தை தரையிறக்க அனுமதி கிட்டியது.







## முற்றாக தீர்க்கப்பட்ட எரிபொருள்

குறித்த விமானம் அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரினை சென்றடைய பல மணித்தியாலங்கள் எடுக்கும் என்பதற்கிணங்க, விமானத்தின் எரிபொருள் தாங்கி முற்றாக நிரப்பப்பட்டிருந்தது. எனினும், இத்தகைய அவசர நிலைமைகளின் போது, விமானத்தை தரையிறக்க வேண்டி ஏற்படின், முதலாவதாக எரிபொருளை முற்றாகத் தீர்த்துவிட வேண்டும். இல்லையேல், எரிபொருளுடன் விமானம் தரையிறங்கும்போது வெடித்துச் சிதறும் ஆபத்து உள்ளது. இதன் காரணமாக, விமானத்தின் எரிபொருள் முற்றாக தீர்ந்துவிடும் வரை அந்த விமானம் கெட்விக் விமான நிலையத்தின் மேல் வான்பரப்பில் பல மணித்தியாலங்கள் வட்டமடித்தது.

## தீர்க்கமான நேரம் உதயமாகியது...

விமானத்தின் ஒரு சக்கரத் தொகுதியில் கோளாறு ஏற்பட்டுள்ளதனால், திடீரென தரையிறக்குவதற்கு பயணிகள் தயாராக வேண்டும் என்று தலைமை விமானி பயணிகளுக்கு அறிவித்தல் விடுத்தார். இந்த அறிவிப்பைக் கேட்டு அச்சத்தில் உறைந்த பயணிகளுக்கு அவர்

(5ஆம் பக்கம் பார்க்க)




அறிவைத் தேடிச் செல்லும் சிறார்களுக்கு

இம்முறையும் நாங்கள் செலிங்கோ லைஃப் ரன்தரு சாரிகாவுடன் ஒரு நாள் கொழும்புச் சுற்றுலா செல்கின்றோம். நாங்கள் நெலும் பொகுண, கொழும்புத் துறைமுகம், BMICH, பத்தரமுல்லை தியத பூங்கா, ஆர்கேட் சுதந்திர சதுக்கம் பார்ப்பதற்கு சிறார்களை அழைத்துச் செல்ல உள்ளோம்.

300 பிள்ளைகள் அவர்களுடைய பெற்றோர்களில் ஒருவருடன் ஒரு நாள் கொழும்புச் சுற்றுலா!
மேலும் 800 ஆறுதல் பரிசுகள்

அழையுங்கள் (011) 2 461 461

www.ceylincolife.com

செலிங்கோ லைஃப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடிமைகள்

மாவீரன் அலெக்ஸாண்டர் இந்தியாவை வென்று வர புறப்பட்டபோது, அவன் மனைவி தனக்கு இந்தியாவிலிருந்து ஒரு முனிவரைப் பரிசாகக் கொண்டுவந்து தரும்படி கேட்டுக் கொண்டாள். அலெக்ஸாண்டர் இந்தியாவை வென்று திரும்பும்போது மனைவி கேட்ட பரிசு அவன் நினைவுக்கு வந்தது. உடனே ஒரு முனிவரைத் தேடிக் கண்டுபிடித்து அவரைத் தன்னுடன் வரும்படி ஆணையிட்டான். முனிவரோ மறுத்துவிட்டார்.

அலெக்ஸாண்டரை இதுவரை யாரும் இவ்வாறு அலட்சியப்படுத்தியதில்லை. இதனால், அவனுக்கு முனிவர் மேல் கோபம் வந்தது. வாளை உருவிக்கொண்டு அவரை நோக்கிப் பாய்ந்தான்.

முனிவரோ, சாந்தமாக அவனைப் பார்த்துப் புன்னகைத்தார். அலெக்ஸாண்டருக்கு இது பெரும் வியப்பாக இருந்தது. அவன் முனிவரைப் பார்த்து ''ஏன் சிரிக்கிறீர்'' என்று கேட்டான்.

அதற்கு முனிவர், ''மன்னா..., நீ இரண்டு விடயங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். முதலாவது உன்னால் என் உடம்பை வெட்டிப் போட முடியுமே தவிர, என்னை அழிக்க இயலாது. இரண்டாவது, என்னுடைய இரண்டு அடிமைகளுக்கு நீ அடிமையாக இருக்கிறாய் என்று நினைக்கும்போது எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது!'' என்றார்.

அலெக்ஸாண்டர், ''நான் உலகத்திற்கே அரசன். மாவீரன். நான் எப்படி அடிமையாக இருக்க முடியும்?'' என்று முனிவரிடம் கேட்டான். முனிவர் ''உன் கோபமும் ஆசையும் எனக்கு அடிமைகள். ஆனால், நீ அவை இரண்டிற்கும் அடிமையாகிக் கிடக்கிறாய். அதைத்தான் நான் சொன்னேன்'' என்றார். அலெக்ஸாண்டருக்கு அப்போதுதான் எல்லாமே விளங்கியது. அவன் தனது தவறுக்கு வருந்தி முனிவரை வணங்கி நின்றான்.



# உழைப்பின் அருமை

ஒரு செல்வந்தர் தனது மகனை தொழில் மற்றும் படிப்பினைகளைப் பெற்றுகொள்வதற்காக, தனது நண்பரின் நிறுவனம் ஒன்றில் பணிசெய்ய 6 மாதகாலத்திற்கு அனுப்பி வைத்தார். செல்வந்தரின் மகனோ அங்கு எந்த வேலையும் செய்யவில்லை. ஆனாலும், தனது நண்பனின் மகன் என்பதால் அவரும் கண்டுகொள்ளாமல் இருந்தார். 6 மாதங்கள் கடந்தன. ஒரு தங்க நாணயத்தைச் சம்பளமாகக் கொடுத்து அனுப்பினார் நண்பர்.

அந்த நாணயத்தை தனது தந்தையிடம் மகன் கொண்டுவந்து கொடுத்தான். அதனை வாங்கிய செல்வந்தர் அதனை தூக்கி தூர எறிந்தார். அதைக் கண்ட மகனோ ஒன்றும் கண்டுகொள்ளாமல் தனது அறைக்கு சென்றுவிட்டான்.

மீண்டும் இன்னொரு தெரிந்த நண்பரிடம் செல்வந்தர் 3 மாதத்திற்கு தனது மகனை வேலைக்கு அனுப்பினார். அங்கும் அவன் எந்த வேலையும் செய்யாமல் 3 மாதங்களைக் கடத்தினான். ஆனாலும், தனது நண்பனின் மகன் என்பதால் அவரும் 2 தங்க நாணயங்களைக் கொடுத்து அனுப்பினார். அதையும் தந்தையிடமே கொண்டுவந்து கொடுத்தான். முன்பு போலவே அந்த 2 நாணயங்களையும் தூக்கி தூர எறிந்தார் செல்வந்தர். அப்போதும் கண்டுகொள்ளாமல் மகன் சென்றுவிட்டான்.

சிறிது காலம் கழித்து செல்வந்தர் தனது மகனை அறிமுகம் இல்லாத ஒருவரிடம் வேலைக்கு சேர்த்துவிட்டார். அங்கு 3 மாதம் வேலை செய்து விட்டு 1/2 தங்க நாணயத்தை ஊதியமாகக் கொண்டுவந்து கொடுத்தான். முன்பு போலவே அதையும் தூர தூக்கி எறிந்தார் செல்வந்தர். ஆனால், இம்முறை அவனுக்கு கோபம் வந்துவிட்டது. ''இது என்ன தெரியுமா? எனது வியர்வை, எனது உழைப்பு. 3 மாதம் தூங்காமல் உழைத்திருக்கிறேன். அதற்கான கூலிதான் இது. இதை அலட்சியமாக தூக்கி எறியலாமா?'' என்று கோபமாகக் கேட்டான்.

அப்பொழுது செல்வந்தர், ''இதைத்தான் உன்னிடம் நான் எதிர்பார்த்தேன் மகனே. நீ உழைக்காமல் கொண்டுவந்து கொடுத்த தங்க நாணயத்தை நான் தூர எறிந்தபோது, உனக்கு கோபம் வரவில்லை. காரணம் அப்போது உனக்கு உழைப்பின் அருமை தெரியவில்லை. இப்போது நீ உழைத்துக் கொண்டுவந்த இந்த தங்க நாணயத்தை நான் எறிந்தபொழுது, உனக்கு கோபம் வருகிறது. காரணம் நீ கஷ்டப்பட்டு உழைத்துப் பெற்று வந்ததால் உழைப்பின் வலி உனக்கு இப்போது தெரிகிறது'' என்று கூறி தன் மகனை அணைத்துக் கொண்டார் செல்வந்தர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



**பெயர்:** ச.ஷெஹானி லக்ஷிகா.
**புள்ளிகள்:** 167.
**பாடசாலை:** கே/தெஹி/ ஸ்ரீ இராமகிருஷ்ணா ஆ.பாட.,



**பெயர்:** ஏ.அப்துர் ரஹ்மான்.
**புள்ளிகள்:** 180.
**பாடசாலை:** க/தெநு/ அரபா முஸ்லிம் ம.வித்.,
**பெற்றோர்:** எம்.அஸ்ஹர்-எஃப்.பஸ்லியா.



**பெயர்:** எஃப்.ஸைனப்.
**புள்ளிகள்:** 159.
**பாடசாலை:** க/தெநு/ அரபா முஸ்லிம் ம.வித்.,
**பெற்றோர்:** எம்.பாஹிர்-எஃப்.சானாஷ்.



**பெயர்:** எம்.உமைரா.
**புள்ளிகள்:** 170.
**பாடசாலை:** கு/ பறகஹதெனிய தேசிய பாடசாலை.



**பெயர்:** எஸ்.அபிஷேக்.
**புள்ளிகள்:** 158.
**பாடசாலை:** சென்.தோமஸ் கல்லூரி, பண்டாரவளை.
**பெற்றோர்:** டி.சுந்தரேசன்-எஸ்.சத்தியபாமா.



**பெயர்:** பே.மோகனகர்சன்.
**புள்ளிகள்:** 153.
**பாடசாலை:** தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி.
**பெற்றோர்:** சி.பேரின்பராசா-பே.வனிதா.

## தி/மூ/புர்க்கானியா வித்தியாலயம்



**பெயர்:** எம்.நிஸ்மி.
**புள்ளிகள்:** 181.
**பெற்றோர்:** வ.நஹீப்-நஜீபா.



**பெயர்:** எஃப்.நிதாஸா.
**புள்ளிகள்:** 159.
**பெற்றோர்:** என்.ஜாபீர்-நிலூபா.



**பெயர்:** எம்.ஜப்ரான்.
**புள்ளிகள்:** 158.
**பெற்றோர்:** எஸ்.மஜூன்-அஸ்மியா.



**பெயர்:** எம்.என்.மரியம்.
**புள்ளிகள்:** 161.
**பாடசாலை:** க/அல்-மினா முஸ்லிம் ம.வித்., கம்பளை.



**பெயர்:** தே.என்டனி லக்ஷன்,
**புள்ளிகள்:** 152.
**பாடசாலை:** சிறுகண்டல் ரோ.க.த.ம.வித்., முருங்கன்.



**பெயர்:** எம்.ஷாகிர்.
**புள்ளிகள்:** 174.
**பாடசாலை:** க/உட/ கழுகமுவ மத்திய கல்லூரி.
**பெற்றோர்:** எம்.ஷாபி-மஸீனா.

# பயணிகளின் உயிர்களைக் காப்பாற்றிய விமானியின் திறமை

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கையளித்தார். ஆபத்தான கணம் உதயமாகியது. டேவிட் வில்லியம்ஸ் தனது சக விமானிக்கு பரிந்துரைகளை வழங்கிக்கொண்டு, பாரிய போயிங் விமானத்தினை மெதுவாக கெட்விக் விமான நிலையத்தில் தரையிறக்க ஆரம்பித்தார்.




தரையிறக்கும் வேளையில் விமானம் தீப்பற்றிக்கொண்டால், அதனை அணைப்பதற்கென விமான நிலையத்தில் தீயணைப்பு வாகனங்கள் உட்பட, தீயணைப்பு வீரர்களும் தயாராக வைக்கப்பட்டிருந்தனர். எம்பியூலன்ஸ் வண்டிகளுடன் மருத்துவக் குழுக்களும் அவசர நிலைமையினை எதிர்கொள்ளத் தயாராக வைக்கப்பட்டிருந்தன. தகவல் அறிந்த ஊடகவியலாளர்களும் விமான நிலையத்திற்கு வருகை தந்திருந்தனர். அச்சந்தர்ப்பத்தில் அந்த விமான நிலையத்திற்கு வந்த விமானங்கள் வேறு விமான நிலையங்களுக்கு திசை திருப்பப்பட்டன. விமானத்தின் வேகத்தினைக் கட்டுப்படுத்திக்கொண்ட விமானி வில்லியம்ஸ், விமானத்தினை ஓடுபாதையில் மெதுவாக தரையிறக்கினார். கோளாறு ஏற்பட்டிருந்த சக்கரத் தொகுதி ஓடுபாதையில் உரசி தீப்பிழம்புகளை வெளியிட்டன. டேவிட் வில்லியம்ஸ் விமானத்தின் அனைத்து பாகங்களையும் இயக்கிவிட விமானம் ஓடுபாதையில் பெரும் இரைச்சலுடன் வேகமாக முன்நோக்கிச் சென்று நிறுத்தப்பட்டது.

## வீரரான விமானி

இந்த நெருக்கடி நிலைமையினை தனது சமயோசித புத்தியால் உயிர்ச்சேதங்கள் ஏதுமின்றி சிறப்பாக நிறைவேற்றிய வேர்ஜின் விமான சேவையின் சிரேஷ்ட விமானியான டேவிட் வில்லியம்ஸ், ஒரே நாளில் சாதனை வீரராக புகழ்பெற்றுவிட்டார். அவரை பயணிகள் உட்பட, அனைவரும் புகழ்ந்தனர். எனினும், அவர், "நான் எனது கடமையைத்தான் செய்தேன்" என்று சாதாரணமாகக் கூறினார்.

-அஷ்வீதா


தமிழ் FM வானொலியில்
வார நாட்களில் மாலை 3 மணி முதல் 5 மணி வரை
'ஆறாம் அறிவு' நிகழ்ச்சி கேளுங்கள்...
விஜய் சந்தா பரிசைப் பெறுங்கள்...!



தகவல்கள், விஞ்ஞான விளக்கங்கள், கேள்விகள்,
கணிதப் புதிர்கள் - இன்னும் பல சுவையான
அம்சங்களோடு - ஆறாம் அறிவு!
தமிழ் FM ▶ வன்னி 99.5 FM, யாழ்ப்பாணம் 99.7 FM
நாடு முழுவதும் 107.8 FM
இணையத்தில்: www.tamilfm.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கையின் தே

எமது இலங்கை நாடானது, தெற்காசியாவிலேயே பழைமை வாய்ந்த மக்களாட்சி முறையைக் கொண்டுள்ள ஒரு நாடாகும். 1931 இல் டொனமூர் ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட டொனமூர் அரசியல் அமைப்பானது, பொதுத் தேர்தல்கள் நடத்தும் முறை மற்றும் சர்வஜன வாக்குரிமை முறையை அறிமுகம் செய்தது. சர்வஜன வாக்குரிமை முறைக்கு அமைவாக 1931 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாவது தேர்தல் இலங்கையில் நடாத்தப்பட்டது. அதன்பின்னர், 1947 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட நாடாளுமன்ற தேர்தல்களின்படி, டி.எஸ்.சேனநாயக்க பிரதமராக நியமிக்கப்பட்டதுடன், அரசியலமைப்பு முறையும் நடைமுறைக்கு வந்தது. அதன்பின்னரான சோல்பரி அரசியலமைப்பினூடாக, இலங்கைக்கு மேலாட்சி நிலை வழங்கப்பட்டதுடன், 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரம் அடைந்தது.

அதன்பின்னரான காலப்பகுதியில் அரசியல் அமைப்புகளும் யாப்பு முறைகளும் பல்வேறு வகையில் மாற்றமடைந்தன. அவ்வாறான மாற்றங்களின் அடிப்படையிலேயே இலங்கையின் தேசிய சின்னங்களும் தெரிவுசெய்யப்பட்டு வரையறை செய்யப்பட்டன. அந்தவகையில், இலங்கையின் தேசிய சின்னங்களின் விபரங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.



## தேசிய கொடி



இலங்கை நாடானது, ஐக்கிய ராச்சியத்திடமிருந்து விடுதலை அடையும்போது, இலங்கைக்கென தனியான ஒரு கொடி தேவைப்பட்டது. அதுவரையில் பிரித்தானிய ஒன்றியக் கொடியே இலங்கையின் தேசிய கொடியாக இருந்தது. விடுதலையின்போது இலங்கையின் பிரதமராக இருந்த டி.எஸ்.சேனநாயக்க அவர்கள், கண்டி ராச்சியத்தின் கடைசி மன்னனான ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனின் சிவப்பு நிறப் பின்னணியில் மஞ்சள் நிற போர் வாளேந்திய சிங்கக் கொடியானது, சுதந்திர இலங்கையைக் குறிக்கும் சிறந்த கொடியாக அமையும் என தேர்வு செய்தார்.

எனினும், அனைத்து இனங்களையும் பிரதிபலிக்கும் வகையில் அமையவேண்டும் எனும் பலரது வேண்டுகோளுக்கிணங்க தேசிய கொடியில் சம அளவு அகலம் கொண்ட மஞ்சள், பச்சை நிறமான இரண்டு நிலைக்குத்தான பட்டைகள் உருவாக்கப்பட்டு பச்சை நிறம் முஸ்லிம் இனத்தையும், மஞ்சள் நிறம் தமிழ் இனத்தையும், வாளேந்திய சிங்கத்தின் பின்புலத்திலுள்ள கடும் சிவப்பு நிறம் பௌத்த இனத்தையும் குறிப்பதுடன், கொடியின் நான்கு மூலைகளிலும் உள்ள அரசிலைகள் கருணை, அன்பு, அனுதாபம் மற்றும் சமத்துவத்தையும் குறிப்பதாக அமைக்கப்பட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட தற்போதைய எமது நாட்டின் தேசிய கொடி 1950 இல் நடைமுறைக்கு வந்தது.

### தேசிய கீதம்

ஸ்ரீ லங்கா தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நல்லெழில் பொலி சிரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நமதலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதோர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதோர் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெல்லாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

## தேசிய கீதம்



1950 ஆம் ஆண்டு வரையில் இலங்கையின் தேசிய கீதம் பலவாறாகப் பாடப்பட்டாலும் 1950 இல் நிதியமைச்சராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஆலோசனையின்பேரில் ஆனந்த சமரக்கோன் எழுதிய 'நமோ நமோ மாதா' என்ற வரியில் ஆரம்பமாகும் பாடல் இலங்கையின் தேசிய கீதமாக ஏற்க முடிவு செய்யப்பட்டது. அந்தவகையில், 1951 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 22 ஆம் திகதி முறையான தேசிய கீதம் ஆனந்த சமரக்கோன் அவர்களது இசை மற்றும் பாடல் வரிகளுடன் முதன் முதலாக கொழும்பு, மியூசியஸ் கல்லூரியைச் சேர்ந்த 500 மாணவ மாணவிகளால் பாடப்பட்டு வானொலி மூலம் நாடெங்கும் ஒலிபரப்பப்பட்டது. அதே ஆண்டில் தமிழ்ப் புலவர் பண்டிதர் மு.நல்லதம்பி அவர்களால் பொருள் மாறுபடாமல் தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டது. அதன்பின்னர், 1961 இல் 'ஸ்ரீ' எனும் எழுத்துடன் ஆரம்பமாகும் 'ஸ்ரீ லங்கா மாதா' என்ற முதல் வரி சேர்த்துக்கொள்ளப்பட்டது.

## தேசிய அரச இலச்சினை



1972 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி இலங்கை நாடு ஜனநாயக சோசலிச குடியரசான தன் பின்னர், ஏற்றுக்கொள்ளப்பட்ட அரச இலச்சினையில், சிவப்பு நிறப் பின்னணியிலான வட்டத்திற்கு நடுவே வாளேந்திய சிங்கம் காணப்படுகின்றது. அந்த வட்டத்தினைச் சுற்றி சம்பிரதாயபூர்வமான அலங்கார முறையிலான தாமரைப் பூ ஒன்று உள்ளது. பரிசுத்தத்தின் சின்னமான இந்த தாமரைப்பூ சௌபாக்கியத்தைக் குறிக்கும் கும்பம் ஒன்றின் மீது உள்ளது. கும்பத்திலிருந்து வெளிவரும் நெற்கதிர்கள் சிங்கத்தின் உருவைச் சுற்றி மேல் நோக்கி வளர்ந்துள்ளன. கும்பத்தின் இரு புறங்களிலும் உள்ள சூரியன் மற்றும் சந்திரன் தேசத்தின் உறுதிப்பாட்டையும் நெற்கதிர்கள் செழிப்பையும் குறிக்கின்றன. மேலே தர்மச் சக்கரம் காணப்படுகின்றது. தேசிய கொடியின் வர்ணங்களுடன் நீல நிறக் கோடொன்றினால் அரச இலச்சினை வர்ணமூட்டப்பட்டுள்ளது. இந்த அரச இலச்சினையை உத்தியோகபூர்வ அலுவலகங்களுக்கு மாத்திரமே பயன்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய சின்னங்கள்

## தேசிய சின்னங்கள்

- தேசிய கொடி
- அரச இலச்சினை
- தேசிய கீதம்
- தேசிய மலர்
- தேசிய மரம்
- தேசிய பறவை
- தேசிய இரத்தினக்கல்
- தேசிய விளையாட்டு
- தேசிய வண்ணத்துப்பூச்சி
- தேசிய மிருகம்



தேசிய மிருகம்
மர அணில்

தேசிய விளையாட்டு
கரப்பந்தாட்டம்





தேசிய இரத்தினக்கல்
நீலக்கல்
(Blue Sapphire)

தேசிய வண்ணத்துப் பூச்சி
Troides darsius



## தேசிய கொடியின் சிறப்புகள்






ஒரு நாட்டின் பெருமையை பறைசாற்றும் சின்னமாக தேசிய கொடி மதித்து கௌரவிக்கப் படுகிறது. தேசிய கொடியை ஏற்றும் போதும் அதனைக் கம்பத்திலிருந்து இறக்கும்போதும் நாட்டு அனாதிபதிக்கு வழங்கக்கூடிய சம அளவு மரியாதை தேசிய கொடிக்கும் வழங்கப்படுகின்றது. நாட்டின் முக்கிய உத்தியோகபூர்வ நிகழ்வுகளின்போது தேசிய கொடி சகல அரசாங்க கட்டடங்களிலும் கம்பீரமாக பறக்கவிடப்படுகிறது.

பலவகையான கொடிகளை ஓர் இடத்தில் பறக்கவிடும்போது அவற்றை விட சற்று உயரத்தில் தேசிய கொடி பறக்கவிடப்பட வேண்டும். ஒரு தேசியத் தலைவரின் மரணம் அல்லது இயற்கை அனர்த்தத்தினால் நாட்டில் ஏற்படும் மனித அழிவின்போது தேசத்தின் சோகத்தை காண்பிக்கும் முகமாக தேசிய கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும். தேசிய கொடியை பறக்கவிடும்போது அதன் நிறம் மங்கியிருந்தாலோ அதன் சில பகுதிகள் கிழிந்திருந்தாலோ அவற்றைப் பறக்க விடுவது நாட்டின் சுயாதிபத்தியத்திற்கு செய்யும் ஓர் அவமதிப்பாக கருதப்படுகிறது. எனவே, தேசியகொடியை நாட்டு மக்கள் அனைவரும் மரியாதையுடனும் பக்தியுடனும் பயன்படுத்த வேண்டும்.

முக்கிய நிகழ்வுகளின்போது தேசிய கொடியைப் பயன்படுத்திய பின்னர் அவற்றை மிகவும் பாதுகாப்பாக இறக்கி நெறியாக மடித்து வைக்க வேண்டும். அடுத்த தேசிய நிகழ்வுகள் நடைபெறும் தினத்தில் மாத்திரம் கம்பங்களில் பறக்க விடவேண்டும். தேசிய கொடியை உரைநிகழ்த்தும் மேடையில் கட்டுவதும் அதற்கு செய்யும் பெரும் அவமதிப்பாகும். தேசிய கொடியை தலைகீழாக கவனக் குறைவின் நிமித்தம் கட்டுவது மன்னிக்க முடியாத குற்றம் மட்டுமல்ல, இலங்கை சட்டப்படி ஒரு தண்டனைக்குரிய குற்றமாகவும் கருதப்படுகிறது.

தேசிய கொடியைப் பறக்கவிடும் போது, அதன் ஒரு பகுதி தரையில் படுவதையோ வேறு ஏதாவது ஒரு பொருளின்மீது விழுவதையோ தடுக்க வேண்டும். இவ்விதம் தேசிய கொடியைக் கட்டுவதும் ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும். அதேபோன்று தேசிய கொடிகளை அச்சிடும் போது, அச்சகங்கள் அதன் இயற்கையான வர்ணங்களை மாற்றிவிடாமலும் அவதானமாக இருக்க வேண்டும். தேசிய கொடியை வீதியின் குறுக்கே கட்டுவதும் அதனை அவமதிக்கும் செயலாகக் கருதப்படும்.









## தேசிய மலர்

**1986** பெப்ரவரி 26 ஆம் திகதி நீலோற்பலம் (*Nymphaea Stellata*) எனும் நீல அல்லி இலங்கையின் தேசிய மலராகப் பிரகடனப் படுத்தப்பட்டது. இந்த நீல அல்லி மலரானது, இலங்கையின் எந்தவொரு நீரோடையிலும் பரந்து வளரக்கூடியது. நீலோற்பலம், நீலாம்பல், நீலத்தாமரை என்று பல பெயர்களால் அழைக்கப்படும் இம் மலர், சிகிரியா ஓவியங்களில் பல விதங்களில் தீட்டப்பட்டுள்ளது.



## தேசிய மரம்



**Mesua Ferrea** எனும் தாவரவியல் பெயரால் அழைக்கப்படும் நாகமரம் 1986 ஆம் ஆண்டு பெப்ரவரி 26 ஆம் திகதி இலங்கையின் தேசிய மரமாக அறிவிக்கப்பட்டது. இந்த நாகமரம் இதன் தனித்துவம், வரலாற்று மற்றும் கலாசார முக்கியத்துவம், பரந்த பயன்பாடு, நிறம், சிற்பம் செதுக்கத்தக்கவாறான இயற்கை அம்சங்கள் காரணமாக, இலங்கையின் தேசிய மரமாக பிரகடனம் செய்யப்பட்டது.

## தேசிய பறவை

**Gallus Lafayetii** எனும் விஞ்ஞானப் பெயர் கொண்ட காட்டுக்கோழி பெசண்ட் குடும்பத்தைச் சேர்ந்தது. இது வீட்டில் வளர்க்கும் கோழிகளை உருவாக்கிய இலங்கைக்கே உரித்தான பறவையாகும். அதனாலேயே இலங்கையின் தேசிய பறவையாக காட்டுக்கோழி பிரகடனப்படுத்தப்பட்டது.



எஸ்.எல்.எம். மஹ்றூஃப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சுற்றாடல்

பெயர்: ..........................................................

**01) பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின்கீழ் கீறிடுக.**

01. உடல் வளர்ச்சிக்கு மட்டும் உரிய உணவுத் தொகுதியைக் கொண்ட கூட்டம் எது?

1. சோறு, பலா, பால், சோயா
2. கிழங்கு, சீனி, மீன், கீரை
3. குரக்கன், மீன், கருவாடு
4. பால், பருப்பு, போஞ்சி, முட்டை

02. வேரின் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம் எது?

1. சதைக்கரைச்சான் 2. கறிவேப்பிலை
3. ரோசா 4. மல்லிகை

03. பண்டைய காலத்தில் சமையலறையின் தரையை சுத்தப்படுத்தப் பயன்படுத்தப்பட்ட உபகரணம் யாது?

1. தும்புத்தடி 2. விளக்குமாறு
3. தூசு துடைப்பான் 4. ஓலைக்கட்டு

04. விசேட கூட்டினைக் கட்டக்கூடிய பறவை எது?

1. தூக்கணாங்குருவி 2. குயில்
3. காகம் 4. சிட்டுக்குருவி

05. 

இப்பூவிற்குரிய தாவரம்;

1. அகத்தி 2. வாழை
3. கொய்யா 4. வேம்பு

06. பந்தல் இட்டு வளர்க்கப்படும் தாவரம் எது?

1. புடோல் 2. மிளகாய்
3. வெண்டி 4. தக்காளி

07. வாகன இயந்திரங்களின் உராய்வைக் குறைக்கப் பயன்படும் பதார்த்தம்;

1. தேங்காய் எண்ணெய் 2. மசகு எண்ணெய்
3. பெற்றோல் 4. வினாகிரி

08. கூர்மையான கண்களைக் கொண்ட பறவை எது?

1. ஆந்தை 2. மயில் 3. புறா 4. காகம்


09. 

இத்தாவரம் பரம்பலடையும் முறை யாது?

1. காற்றினால் 2. நீரினால்
3. விலங்கினால் 4 வேரினால்

10. உடல் களைப்பின்றி மூளை மட்டும் களைப்படையும் விளையாட்டு யாது?

1. கிளித்தட்டு 2. கிட்டிப்புல்
3. சதுரங்கம் 4. பல்லாங்குழி

11. 

இந்த தையல் முறையின் பெயர் யாது?

1. சங்கிலித் தையல்
2. கம்பளித் தையல்
3. வெட்டுக் குத்து தையல் 4. நூலோடித்தையல்

12. நிழலின்கீழ் வளரக்கூடிய தாவரம் யாது?

1. அந்தூரியம் 2. வாழை
3. குரோட்டன் 4. கத்தரி

கடந்தவார விடைகள்... 20 ஆம் பக்கத்தில்

13. நீரை சுத்திகரிக்கப் பயன்படும் பதார்த்தம் யாது?

1. மதுசாரம் 2. குளோரின் 3. டெடோல் 4. பைனோல்

14. உடலில் இருந்து நீர் வெளியேறும் சந்தர்ப்பம் யாது?

1. வியர்வை 2. குருதிப்பெருக்கு
3. உட்சுவாசம் 4. வாந்தி

15. கறிகளுக்கு உப்பு சேர்ப்பதன் நோக்கம் யாது?

1. உப்பு மலிவானது 2. உப்பு அதிகளவு கிடைப்பதால்
3. சுவையூட்டுவதற்கு 4. உடல் நலனிற்கு

**02) பின்வரும் உபகரணங்கள் பயன்படுத்தப்படும் தொழில்கள் எவை என இனம் காண்க.**

சாந்தகப்பை, தூக்குக்குண்டு, மணியாசு, கைவாள், சீவுளி

01. சுவரைக் கட்டும்போது நிலைக்குத்தைப் பேணல் - ..............................
02. சுவருக்கு சாந்து பூசுதல் - ..............................
03. சாந்துக் கலவையை சீராகப் பூசுதல் - ..............................
04. மரப்பலகையை சீவி மட்டப்படுத்துதல் - ..............................
05. மரக்குற்றிகளை அளவாக அறுத்தல் - ..............................

**03) சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

01. நிம்மதியான உறக்கத்திற்கு சுத்தமான தலையணை அவசியம். (---)
02. ஆடையில் படிந்துள்ள தார் கரையை அகற்ற சவர்க்காரம் கொண்டு கழுவுதல் வேண்டும். (---)
03. குழுவாக வேலை செய்வதால் நேரம், உழைப்பு மீதமாகும். (---)
04. வாழை, வாழ்நாளில் பல தடவைகள் பூத்துக் காய்க்கும். (---)
05. செண்பகம், பயிர்களை சேதப்படுத்தும்- நத்தைகளை அழிக்கும். (---)
06. விவசாயிகள் வயலை உழுவதற்கு ஏரைப் பயன்படுத்துவர். (---)
07. உணவு சமைப்பதற்கு உலோகப் பாத்திரங்களைப் பயன்படுத்தலாம். (---)
08. பசளியில் அதிகளவில் புரதம் உண்டு. (---)
09. எலுமிச்சையை ஈரமண்ணில் புதைத்து வைத்து பேணிக் காக்கலாம். (---)
10. சிங்கராஜ வனம் ஒரு தேசிய வனமாகும். (---)

**04) பொருத்தமான விடை தருக.**

01. பூக்களினால் எமக்கு கிடைக்கும் பயன்கள் யாவை?

..............................

02. தாவர இலைகளைப் பயன்படுத்திக் கூடு கட்டும் பிராணி எது?

..............................

03. பூக்களுக்கு நன்மை செய்யும் பிராணிகள் 2 தருக.

..............................

04. கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி தயாரிக்கக்கூடிய பொருட்கள் 3 தருக.

..............................

05. மேல் மாகாணத்தில் கடலுடன் கலக்கும் ஆறு யாது?

..............................

விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation

# பொலிஸ் செய்திகளை வழங்குவதில் காணப்பட வேண்டிய பொறுப்புணர்வு!




செய்தி சேகரிப்பில் பொலிஸ் செய்தி சேகரிப்பும் முக்கியமானதோர் அம்சமாகும். பொலிஸ் செய்திகள் மிகவும் அவதானத்துடன் கையாளப்படவேண்டியவையாகும். பொலிஸ் செய்திகளுக்கென ஆசிரிய பீடத்தில் 'பொலிஸ் செய்தியாளர்கள்' பிரத்தியேகமாக இருப்பதுண்டு. பொலிஸ் செய்திகள் பல்வேறு வகைகளில் கிடைக்கப்பெறுவதுண்டு.

அதன்படி, சில செய்திகள் பொலிஸ் அறிக்கைகளாக ஆசிரிய பீடத்திற்கு தொலைநகல் வடிவிலும் வருவதுண்டு. மேலும், பொலிஸ் தரப்பில் விசேட செய்தியாளர் சந்திப்பை நடத்தியும் செய்திகள் வழங்கப்படுவதுண்டு. இதற்கென பொலிஸார் தரப்பில் விசேட ஊடக பேச்சாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பார். இவர்தான் இந்த ஊடக மாநாட்டில் ஊடகவியலாளர்களுக்கு சம்பவங்கள் தொடர்பான தகவல்களை வழங்குவார். இதன்போது ஊடகவியலாளர்கள் தாம் விரும்புகின்ற கேள்விகளை எழுப்பி தகவல்களை திரட்டிக் கொள்ளமுடியும். இன்னொரு வகையிலும் பொலிஸ் செய்திகள் சேகரிக்கப்படுவதுண்டு.

அதாவது, பொலிஸ் செய்திகளை சேகரிப்பதற்கென ஆசிரிய பீடத்தினால் நியமிக்கப்பட்டிருக்கும் ஊடகவியலாளர் பொலிஸ் நிலையங்களிலுள்ள அதிகாரிகள் அல்லது பொலிஸ் செய்தித் தொடர்பாளர்களுடன் தொடர்புகளை வைத்திருப்பர். இந்த செய்தியாளரின் பணி எவ்வாறு இருக்குமென்றால், தினசரி காலையில் குறித்த பொலிஸ் நிலையங்களுடன் தொலைபேசியில் தொடர்புகளை ஏற்படுத்தி முக்கிய செய்திகள் ஏதும் உள்ளனவா? என்று கேட்டறிவார். அதற்கமைய, பதிவில் இருக்கின்ற





செய்திகளை பொலிஸ் செய்தி தொடர்பாளர் குறித்த ஊடகவியலாளருக்கு வழங்குவார். இதனை அடியொட்டியே செய்தியாளர் செய்தியை அமைப்பார்.

இன்னொரு வகையில், செய்தியாளர் ஏற்கனவே கேள்வியுற்ற செய்தி தொடர்பாக பொலிஸ் தரப்பிலிருந்து மேலதிக தகவல்களையோ, உறுதிப்படுத்தல்களையோ பெற்றுக்கொள்ளும் வழிமுறையொன்றும் உள்ளது.




இதனை News Loop என்று கூறுவார்கள். அதாவது, ஒரு சம்பவம் தொடர்பாக ஆரம்பத் தகவல்களை ஏதாவதொரு வகையில் செய்தியாளர் பெற்றிருப்பார். இருப்பினும், இவை தொடர்பான நம்பகத்தன்மையை உறுதிசெய்யவேண்டிய தேவை இருக்கும். அதேபோல் அச் செய்தி தொடர்பான விரிவான விபரங்கள் தேவையாய் இருக்கும். இவற்றை குறித்த பொலிஸ் நிலையத்தினூடாக பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பாக இதனை செய்தியாளர் பயன்படுத்திக்கொள்வார்.

பொலிஸ் செய்திகளில் பலவகைகள் உள்ளன. அரசியல், கொலை, கொள்ளை, பழிவாங்கல்கள், தாக்குதல்கள் என அவை பலரகப்படும். எனவே, இத்தகைய செய்திகளை அமைக்கும்போது சட்ட சிக்கல்கள் எதுவும் ஏற்படாதவாறு, யாருடைய பெயருக்கும் களங்கம் ஏற்படாதவாறு மிகவும் நிதானமாக பொறுப்புணர்வுடன் செய்திகளை அமைத்தல் வேண்டும்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொலிஸ் தரப்பிலிருந்து வழங்கப்பட்ட முக்கிய தரவுகளிலிருந்து மாறுபட்ட தரவுகளை முன்வைக்க முயலக்கூடாது. ஏனென்றால், பொலிஸ் பதிவில் உள்ள சம்பவங்கள் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்படும்போது அந்த வழக்கு விசாரணைகளின்போது, சில சந்தர்ப்பங்களில் ஊடகங்களில் வெளிவந்த செய்திகளும், ஆதாரங்களாக காட்டப்படும் வாய்ப்புக்கள் உள்ளன. எனவே, இச் செய்திகள் திரிபுபடுத்தப்படாதவையாக இருத்தல் அவசியமாகும். (தொடரும்)

-ரிஷபன்

இரட்டிப்பு பரிசு...

விஜய் - TOP NEWS இணைந்து வழங்கும் வாரம் ஒரு 8GB Pen Drive பரிசு!!



4000 ஆங்கில மாதிரி கடிதங்கள் அடங்கிய மென்பொருளும் இலவசமாக வழங்கப்படுகின்றது.

பிரதி புதன்கிழமைகளில் 'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை இவ்வார 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு 8GB Pen Drive பரிசாக வழங்கப்படும்.

*14.01.2015* TOP News *கேள்விக்கான விடை:*
பிலியந்தல

Pen Drive *வெற்றியாளர்:*
ஏ. அல்பெட் ரஜீவன்,
42, காளி கோவில் வீதி,
பெரிய ஊரணி.

அனுப்பவேண்டிய முகவரி:

Pen Drive
(28.01.2015)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'TOP News' SMS செயற்படுத்தும் முறை:




இச்சேவையின் ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்பதோடு வேலைவாய்ப்பு ALERT களையும் பெறமுடியும்.

இவ்வார கூப்பன்:
28.01.2015

விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..............................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் அடிமைச் சேவகத்தை இல்லாதொழிக்க முயற்சித்த ஆள்பதி

ஆள்பதி மெயிட்லென்ட் அவர்கள் கி.பி 1806 இல் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார். அதில் மூன்றாவது உப பிரிவின்படி, அடிமைகளின் உரிமையாளர்கள் தங்களின் கீழ் உள்ள அடிமைகளின் தொகையை பதிவு செய்யவேண்டும். எனினும், இந்தச் சட்டத்தில் இருந்து அவர்கள் தந்திரமாகத் தப்பிக்கொண்டனர். கி.பி 1816 இல் சேர். அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டன் அவர்கள் அடிமைப் பெண்களின்மூலம் பிறந்த குழந்தைகளை அவ்வருடம் ஓகஸ்ட் 12 ஆம் திகதி அடிமை நிலையில் இருந்து விடுவித்தார். அன்றைய தினம் முடிசூட்டிய இளவரசரின் பிறந்த நாளுக்காகவே அதனை அவர் செய்தார்.

அக்காலகட்டத்தில் ஆள்பதி அவர்கள் சரியான முறையில் அந்த சட்டத்தை அமுல்படுத்த முயற்சித்தார். எனினும், நினைத்தது போல் அது சரியான முறையில் நிறைவேறவில்லை. தொண்ணூற்றி ஆறுபேர் மாத்திரமே விடுதலை பெற்றனர். எனினும், அடிமைத்தனத் திலிருந்து விடுதலை அளிக்கவேண்டும் என்பதே ஆள்பதியின் நோக்கமாக இருந்தது. அவர் அதற்காக முறையான திட்டமொன்றை வகுத்தார். அடிமைச் சமூகத்தின் உரிமையை இல்லாதொழித்து மதிப்பீட்டாளரினால் விதிக்கப்படும் பணத்தைச் செலுத்தி அடிமை நிலையிலிருந்து விடுதலைபெற அனுமதி வழங்கினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுகள் சிலவற்றின் பாரம்பரிய கலைகள்

உலகின் ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு பாரம்பரிய கலைகள் காணப்படுகின்றன. உலக மக்களின் மத-இன-கலாசார-பண்பாட்டு முறைகளுக்கேற்ப, அவர்களிடையே பல்வேறுபட்ட சம்பிரதாயங்களும் மரபுரிமைகளும் பாரம்பரிய கலைகளும் நிலவுகின்றன. அந்தவகையில், உலகின் சில நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகின்ற சில பாரம்பரிய கலைகள் பற்றி நோக்குவோம்.



## சீனாவின் கொரிய இனத்தவர்களின் விவசாய நடனம்

இந்த விவசாய நடனம், வடகிழக்கு சீனாவில் வசிக்கும் கொரிய இனக்குழுக்களின் பிரபல்யமான நடனமாக அமைவதுடன், இதன்போது அவர்கள் ஒன்றிணைந்து பூமாதேவிக்கு பூஜைகளை நடத்துகின்றனர். அதிர்ஷ்டத்தினைத் தருமாறும் அமோக விளைச்சலைப் பெற்றுத் தருமாறும் இதன்போது அவர்கள் இயற்கையிடம் இறைஞ்சிக் கேட்கின்றனர். அந்த நடனத்தில் இசை, பாடல்கள் பாடுவது, நடனம் ஆகிய மூன்று அம்சங்களும் இடம்பெறுகின்றன.



## கொஸ்ட்டா ரிகாவின் மாட்டுவண்டிகள்

கொஸ்ட்டா ரிகாவின் மாட்டுவண்டிப் பயன்பாடு 19 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இருந்து ஆரம்பமாகியுள்ளது. கொஸ்ட்டாரிகாவின் மத்திய பள்ளத்தாக்கில் இருந்து பசுபிக் கரையோரப்பகுதியின் ஜுண்டா அரினா வரை கோப்பி விதைகளை எடுத்துச் செல்ல இந்த மாட்டுவண்டிகள் பயன்படுத்தப்பட்டன. அன்றைய காலத்தில் அங்குள்ளவர்களின் போக்குவரத்துச் சாதனமாக மாட்டுவண்டிகளே இருந்துள்ளன. எனவே, சமூக அந்தஸ்தின் அடையாளமாக அவை கருதப்பட்டன. கொஸ்ட்டா ரிகாவின் ஒவ்வொரு பிராந்தியத்திற்குமென பல்வேறுபட்ட வண்டி அலங்காரங்கள் உள்ளன. மாட்டுவண்டியின் சக்கரத்திலுள்ள அலங்கார முறைகளை வைத்து, அதனை செலுத்துபவரின் வம்சாவளியை அறிந்துகொள்ள முடியும். ஒவ்வொரு வண்டிக்கும் தனித்தனிப் பாடல்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஸ்பெய்னின் மனித கோபுரம்

'கெஸ்டெல்' என்று அழைக்கப்படுவது, மனிதர்கள் தோள்களின்மீது ஏறி அமைக்கும் மனித கோபுரம் போன்ற அமைப்பினை ஆகும். இந்த கோபுரத்தின் கீழ் உடற்பலம் மிக்கவர்கள் இருப்பர். மேலே செல்லச் செல்ல எடை குறைவான இளைஞர்களைக் காணமுடியும். உச்சியில் சிறுவர்கள் இருப்பர். ஸ்பெய்னின் கெட்டலோனியா நகரில் நடைபெறும் வருடாந்த விழாவில் இதுவும் ஓர் அம்சமாகக் காணப்படும். மனித கோபுரம் அமைக்கும் செயற்பாடு பரம்பரை பரம்பரையாக அங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## கிக்பினார் எண்ணெய் மல்யுத்தம்

துருக்கியின் 'எடர்னி' எனும் இடத்திலேயே இந்த மல்யுத்தப் போட்டி நடைபெறுகின்றது. இந்த எண்ணெய் மல்யுத்தப் போட்டியில் வெற்றி பெறுபவருக்கு கிக்பினார் தங்கப்பட்டி மற்றும் தலைமை மல்யுத்த வீரர் ஆகிய விருதுகள் வழங்கப்படுகின்றன. வெற்றி பெற்றவருக்கு




வழங்கப்படும் தங்கப் பட்டி, வீதி எங்கும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் போட்டியாளரின் உடலை சூடாக்கும் முகமாகவும் அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் முகமாகவும் போட்டியாளரின் உடலில் எண்ணெய் பூசப்படும். போட்டியில் கலந்துகொள்ளும் மல்யுத்த வீரர்கள் எருமை மாடு அல்லது மாட்டுத் தோலினால் தைக்கப்பட்ட குட்டைக் காற்சட்டையினை அணிந்திருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லா கொமேரா தீவின் விசில் மொழி

லா கொமேரா தீவு மக்களிடையே பாவனையிலுள்ள ஒரு மொழிதான் 'விசில் மொழி' ஆகும். உலகின் அதிகூடிய மக்களிடையே பாவனையிலுள்ள ஒரே ஒரு விசில் மொழியாகவும் இது கருதப்படுகின்றது. இதனை 'சில்போ கொமேரோ' என அழைக்கின்றனர். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக ஆசிரியர்-மாணவர் வழிமுறையூடாக தொடர்ந்து வரும் ஒரு நுட்ப முறையாக இந்த விசில் மொழி விளங்குகின்றது. 1999 ஆம் ஆண்டு முதல் அத்தீவுப் பகுதிக்குரிய பாடசாலைகளில் விசில் மொழி கற்பிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

-பிரியா



## மொங்கோலியாவில் எலும்புகளால் ஏவுதல்



மொங்கோலியர்கள் தாம் வளர்க்கும் விலங்குகளின் ஒரு சில எலும்புகளை புனிதத்தன்மை வாய்ந்ததாகக் கருதுகின்றனர். அவற்றை பாரம்பரிய மதச் சடங்குகளை நிறைவேற்றவும் பாரம்பரிய் விளையாட்டொன்றுக்கும் பயன்படுத்துகின்றனர். அந்த போட்டியில் 6 முதல் 8 போட்டியாளர்கள் கலந்துகொள்வர். அவர்கள் ஒரு மரச் சட்டகமொன்றை அமைத்து, அதில் ஒரு பகுதியைக் குறிப்பிட்டு, அந்த இலக்கை நோக்கி எலும்புகளை ஏவுவர். இதன்போது ஒவ்வொரு போட்டியாளரும் தமக்கென பிரத்தியேக உபகரணங்களை வைத்திருப்பர். அவர்கள் தமது ஆற்றலினையும் அந்தஸ்தையும் வெளிப்படுத்தும் வகையிலான ஆடை அணிகலன்களையும் அணிந்திருப்பர்.

உலகின் அநேக நாடுகளில் வருடத்தின் முதலாவது மாதமாக ஜனவரி மாதமே கருதப்படுகின்றது. அதன்படி, ஜனவரி 1 ஆம் திகதியே புது வருடத்தின் முதல் நாளாகும். புது வருடப் பிறப்பினை அடுத்தே, புதிய பாடசாலை தவணைகள் ஆரம்பமாகின்றன. பாடசாலை செல்லும் மாணவர்களைப் பொறுத்தவரையில், புது வருடம் அவர்களின் பாடசாலை வாழ்க்கையில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. புது வகுப்பு, புதிய பாடங்கள், புதிய நண்பர்கள், புதிய ஆசிரியர்கள் என பல புதிய அத்தியாயங்கள் புரட்டப்படும் காலப்பகுதி இதுவாகும்.




# புது வருடத்தில் புதிய திட்டங்களைக் கைப்

## புது வருட திட்டமிடல்

பாடசாலை மாணவர்கள் புது வருட திட்டங்களை வகுத்துக்கொள்வது மிகவும் அவசியமாகும். முன்னைய வருட நிறைவில் மாணவர்கள் அதிகமான விடயங்களை அறிந்துகொண்டிருப்பார்கள். வருடம் முழுவதும் கிடைத்த அனுபவங்கள், கிடைத்த சான்றிதழ்கள், புகழ், நற்பெயர், ஈடுபாடுகள், அவதானம் மற்றும் பரீட்சைகளில் தோற்றி ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற புள்ளிகள் என்பனவற்றுட னேயே மாணவர்கள் புது வருடத்தில் புதிய வகுப்பிற்குச் செல்கின்றனர். ஆகவே, அவற்றை மனதில்கொண்டு, புதிய வருடத்தை வெகு சிறப்பாக மாணவர்கள் திட்டமிட்டுக்கொள்ள வேண்டும்.

தடைகளைத் தாண்டி வெற்றிப் பாதையை நோக்கி...



## மாணவர்களின் கடமை

உங்கள் வாழ்க்கையை ஒரு நதியுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். நதியொன்று பெருக்கெடுத்து ஓடும்போது பள்ளத்தாக்குகள், சமவெளிகள், கற்பாறைகள், சதுப்பு நிலங்கள் என்பனவற்றை தாண்டியே கடலில் கலக்கின்றது. இவை அனைத்தும் அந்த நதியின் பாதையை மாற்றும் தடைக்கற்கள். இது போன்றதுதான் எமது வாழ்க்கையும். கல்வி கற்கும்போது நாம் பல்வேறுபட்ட தடங்கல்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படலாம். அவற்றை எதிர்த்து வெற்றிகொள்ள வேண்டியது மாணவர்களின் கடமை. அந்தக் கடமையை சரிவர நிறைவேற்ற புது வருட ஆரம்பத்திலேயே உறுதிகொள்ள வேண்டும்.

## வாழ்க்கையில் பெறுமதி மிகுந்த காலம்

ஒருவரின் வாழ்க்கையில் மிகப் பெறுமதியான காலம் மாணவப் பருவமாகும். இக்காலகட்டத்தில் சொல்வதும் செய்வதும் சிந்திப்பதும் முழுமையாக எமது எதிர்காலத்தை தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. எனவே, மாணவப் பருவத்தில் கல்விக்கே முதலிடம் கொடுக்க வேண்டும். புதிய வருடத்தை திட்டமிடும்பொழுதும் கல்விக்கு முதலிடம் கொடுத்தே திட்டமிட வேண்டும்.

## கடந்த வருடம் கற்றுக்கொண்ட பாடம்

கடந்த வருடத்தை நாம் அவசியம் திரும்பிப் பார்க்க வேண்டும். அதன்படி, கடந்த வருடத்தில் நாம் சரியான முறையில் செயல்பட்டோமா?, நம்மிடையே நிலவிய குறைபாடுகள் என்ன?, என்னென்ன தவறுகள் செய்தோம்?, தவறவிட்ட கடமைகள் மற்றும் பொறுப்புகள் எவை? என்பனவற்றைப் பற்றி மாணவர்கள் சிந்தித்து அவைபற்றி பெற்றோருடன் ஆலோசிக்க வேண்டும். பாடசாலை செயற்பாடுகளிலும் சமூக செயற்பாடுகளிலும் எனது பங்களிப்பு எத்தகையது என்பதனையும் மாணவர்கள் ஆராய்வது முக்கியமானதாகும். அத்துடன், வருட இறுதிப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் நீங்கள் பெற்ற புள்ளிகளை அடிப்படையாக வைத்து எதிர்காலத்தில் உங்கள் கற்றல் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை தீர்மானியுங்கள். அதேபோல் பாட இணைச் செயற்பாடுகளிலும் உங்கள் அக்கறையை வளர்த்துக்கொள்ள வேண்டும். அது உங்களின் ஆளுமை விருத்திக்குப் பேருதவி புரியும்.

நல்லதோர் உலகிற்கு நல்லதொரு சிந்தனை



'வருட
மதிப்பீட்டு
[illegible] த ஆ

## பகுப்
## செய்

வருட இறுதி
கையளிக்கப்ப
அறிக்கைப் புத்
மாணவர்களுக்
சிறந்த ஆரம்ப
மாணவர்களாச்
ஒவ்வொரு பா
புள்ளிகள், திற

புதிய இலக்கும் புதிய திட்டங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...க் கைக்கொள்வோம்







*'வருட இறுதியில் உங்களிடம் கையளிக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கைப் புத்தகம், எதிர்வரும் வருடத்தின் சி[illegible]த ஆரம்பத்திற்கு நல்வழி காட்டுவதாக அமையும்'*

## பகுப்பாய்வு செய்யுங்கள்

வருட இறுதியில் உங்களிடம் கையளிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைப் புத்தகமே, மாணவர்களுக்கு கிடைத்துள்ள சிறந்த ஆரம்ப வழிகாட்டியாகும். மாணவர்களாகிய நீங்கள் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற புள்ளிகள், திறமை மற்றும் கல்வி மட்டம் என்பனவற்றை சிந்திப்பதற்கு இது சிறந்த ஆதாரமாக அமைகின்றது. குறைந்த புள்ளிகள் பெற்ற பாடங்கள் எவை?, அப்பாடங்களில் புள்ளிகள் குறையக் காரணம் யாது?, அதனைக் கற்பதில் ஏற்பட்ட தடைகள் எவை? பாடத்தில் கவனமின்மைக்கான காரணங்கள் எவை? போன்றவற்றை விளங்கிக்கொண்டு பாடங்களில் கவனம் செலுத்துவது பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெற வழிவகுக்கும்.



## புது வருடத்தின் முக்கியத்துவம்

புது வருட தொடக்கத்தில் புதிய சீருடைகள், பாதணிகள், புத்தகங்கள், புதிய புத்தகப் பைகள் என எல்லாவற்றையும் புதியவையாக மாற்றிக்கொள்ளும் மாணவர்கள், புது வருடத்தில் தம்மிடையே புதிய சிந்தனைகளையும் புதிய இலக்குகளையும் புதிய லட்சியங்களையும் செயற்படுத்தவும் வளர்க்கவும் உறுதிகொள்ள வேண்டும்.

## வாழ்க்கைக்கு முன்மாதிரியான சுலோகம்

புது வருட திட்டமிடலின் போது, வாழ்க்கைக்கு முன்மாதிரியாக எடுக்கக்கூடிய சுலோகம் ஒன்றை தயார் செய்து கொள்ளுங்கள். அது உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு மிகவும் முக்கியமானதாகும். அந்த சுலோகத்தை எப்பொழுதும் உங்கள் கண்களுக்குப் புலப்படும் இடத்தில் எழுதி வையுங்கள். அதனைக் காணும்போதெல்லாம் நீங்கள் புத்துயிர் பெற்று தன்னம்பிக்கையுடன் செயற்பட ஆரம்பிப்பீர்கள்.

## திட்டமிட்டு செயற்படல்

பாடசாலை திட்டமிடல்களை நேர அட்டவணையின்படி செயற்படுத்துங்கள். குறிப்பிட்ட கால அவகாசத்தில் பாட அலகுகளை முடிக்க வேண்டும், பரீட்சைக்குத் தயாராக வேண்டும் என அந்த திட்டமிடல்களை அமைத்துக்கொள்ளுங்கள். கற்றலுக்கு முதலிடம் வழங்குவதோடு, விளையாட்டு, இதர பொழுதுபோக்கு அம்சங்கள், குடும்பத்தினருடன் கலந்திருப்பதற்கான நேரம் என நேர அட்டவணையில் நேரம் ஒதுக்கிக்கொள்ளுங்கள்.




## ஊடகங்களை நல்ல முறையில் பயன்படுத்துங்கள்

நல்லவிதமான ஊடக பயன்பாடு உங்கள் வாழ்க்கையை நல்வழிப்படுத்தும். அதனை மனதில் உறுதியாக நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும். அறிவுத் தேடல் மிக முக்கியம். அதனை நாமே முனைப்போடு தேட வேண்டும். இன்றைய காலத்தில் தொலைக்காட்சி, பத்திரிகைகள், இணையத்தளங்கள், தொலைபேசி, வானொலி, முகநூல் என பல்வேறுபட்ட தொடர்பாடல் வழிகள் உள்ளன. அவற்றை எமது வாழ்க்கைக்குப் பயன்படும் முறையில் மட்டும் பயன்படுத்திக்கொள்ளப் பழக வேண்டும்.




## நல்ல நூல்களை வாசியுங்கள்

வாசிப்பு ஒரு மனிதனை முழுமையாக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். நூல்களை வாசிப்பதன்மூலம் அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம்; எழுத்தாற்றலை வளர்த்துக்கொள்ளலாம். நூல்களை வாசிக்கும்போது, எழுதுவதற்குத் தேவையான புதுப்புது சொற்கள் அறியக் கிடைக்கும். மொழித் தேர்ச்சி பெற வாய்ப்புண்டு. எமது கல்வியின் இறுதி இலக்குகளில் ஒன்றுதான் பரீட்சையை சிறந்த முறையில் எதிர்கொள்வது. நன்றாக வாசிக்கும் பழக்கத்தை அதிகரித்தால் பரீட்சையில் நன்றாக எழுதலாம். நேரத்தை முகாமைப்படுத்தலாம். அத்தோடு, அன்றாடம் வாசிக்கும் நூல்களில் உள்ள பயனுள்ள கருத்துக்களை குறித்துக் கொள்ளுதலும் நலமானது.


## நல்ல நண்பர்கள்

எமது வாழ்க்கையை மாற்றி அமைப்பவர்களில் நண்பர்களின் சகவாசமும் பங்கு வகிக்கின்றது. நல்ல நண்பர்களால் நன்மைகளும் தீய நண்பர்களால் தீமைகளும் ஏற்படுகின்றன. ஆக, கடந்த வருடம் எமது முன்னேற்றத்திற்கோ அல்லது பின்னடைவிற்கோ நண்பர்களின் பங்களிப்பு எத்தகையதாக இருந்தது என்பதனை நன்கு ஆராய்ந்து பாருங்கள். நல்லவர்களுடன் இணைந்து செயற்படுங்கள். தீயவர்களைவிட்டு இயன்றளவு விலகி நில்லுங்கள்.

**- இரஞ்சித் ஜெயகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வட்டதாகெய


நுழைவாயிலொன்று

# ஹத்திகுச்ஜி விகாரை

வடமேல் மாகாணத்தின் கிரிபாவ பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட, மைலேவ கிராமத்தில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக 'ஹத்திகுச்ஜி விகாரை வளாகம்' அமைந்துள்ளது. அநுராதபுர யுகத்தின் ஆரம்ப காலத்திற்குரிய தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த சான்றுகளை இங்கிருந்து பெற்றுக்கொள்ள முடியும். அநுராதபுரத்தின் ஆரம்ப காலத்தில் ஆட்சி செய்த மன்னர்களில் ஒருவரான சிறிசங்கபோ மன்னன் (கி.பி. 251-253), தனது ஆட்சியதிகாரத்தினைக் கைவிட்டு மாலை வேளையில் தெற்கு நோக்கிச் சென்று, இரவான போது குறித்த இடத்தைச் சென்றடைந்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்படுகின்றது.

சிறிசங்கபோ மன்னன் தனது சிரசினை (தலையை) தானம் வழங்கிய இடமாகவே ஹத்திகுச்ஜி விகாரை வளாகம் பிரசித்தி பெற்றுள்ளது. இலங்கை வரலாற்று நூல்களான பூஜாவலிய, ராஜாவலிய, அத்தனகலு வம்சம் ஆகியவற்றிலும் சிறிசங்கபோ மன்னன் தனது சிரசினை தானம் வழங்கிய தகவல்கள் மரபுவழிக் கதைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

தொல்லியல் சான்றுகளின்படி, ஹத்திகுச்ஜி விகாரை மிக முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கருதப்படுவதுடன், கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் இருந்து 13 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதிக்குரிய கட்டடங்களின் இடிபாடுகளை தற்போதளவில் இந்த வளாகத்தில் காணலாம். அத்துடன்; குளங்கள், கற்பாறைக்குளங்கள் உட்பட; குகை விகாரை, வட்டதாகெய, போதிகரய, அரைவட்ட மண்டபம், பொஹொயகெய போன்ற பல்வேறு கட்டடங்களின் இடிபாடுகளும் இங்கு காணப்படுகின்றன. -(இ)


பொஹொயகெய


நீள்வட்ட வடிவிலான மண்டபமொன்றின் இடிபாடு


வேலைப்பாடுகளற்ற காவற்கற்களுடனான கட்டடமொன்றின் இடிபாடு


வேலைப்பாடுகளுள்ள சந்திரவட்டக்கல்லுடனான கட்டடமொன்றின் இடிபாடு


வேலைப்பாடுகளற்ற சந்திரவட்டக்கல்லுடனான கட்டடமொன்றின் இடிபாடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீண்டும் அச்சுறுத்தக்கூடிய தொற்றுநோய்கள்



உலக வரலாற்றில் காலத்திற்குக் காலம் தொற்றுநோய்கள் பரவி மனிதர்களைப் பலியெடுக்கும் சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன. கொள்ளை நோய், கொலரா, பறவைக் காய்ச்சல், தொழுநோய் என்பன அவற்றில் சிலவாகும். அந்தவகையில், தற்காலத்தில் பாரிய அச்சுறுத்தலைத் தந்த ஆட்கொல்லி நோயான எபோலா வைரஸ் தொற்றும் இந்த வரிசையில் அடங்குகின்றது. அதன்படி, இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அல்லது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் உலகை அச்சுறுத்திய ஆட்கொல்லிநோய்கள் தற்போது புதிய வடிவில் உலகை அச்சுறுத்தும் வாய்ப்புகள் உள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அவ்வாறு ஆபத்து நிலையினை ஏற்படுத்தக்கூடிய ஐந்து ஆட்கொல்லி தொற்றுநோய்கள் பற்றி அறிவோம்.

## கொள்ளை நோய்



கி.பி 1347 முதல் 1351 வரையான காலப்பகுதியில் உலகின் மிகவும் மோசமான ஆட்கொல்லி நோயாக கொள்ளை நோய் (Plague) காணப்பட்டது. ஐரோப்பா முழுவதும் 25 மில்லியனுக்கு அதிகமான மக்கள் இந்த நோயினால் இறந்தனர். எலிகளால் தொற்றக்கூடிய இந்த கொள்ளை நோயை 'கறுப்பு மரணம்' என்று அழைத்தனர். விஞ்ஞானிகள் இந்த தொற்றுநோய்க்கு காரணமான எலிகளுக்குள் உள்ள பக்றீரியாவினை இனம் கண்டுள்ளனர். இதில் பழைய வடிவத்தினைக் கொண்ட பக்றீரியாவைவிட புதிய வடிவம் கொண்ட பக்றீரியாவும் உள்ளது. இதன்படி, இது ஒரு புதிய தொற்றுநோயாக மாறக்கூடிய ஆபத்து நிலையும் காணப்படுகின்றது.



எலிகளிடமிருந்து பக்றீரியாக்கள் தெள்ளுப்பூச்சிகளில் இருந்து மனிதர்களுக்கு வருவதனூடாக கொள்ளை நோய் பரவுகின்றது.



- பக்றீரியா: எரிசினியா-பெஸ்டிஸ்.
- நோய் அறிகுறிகள்: உடல் களைப்படைதல், காய்ச்சல், விழுங்குவதில் அசௌகரியம், விரல்கள் மற்றும் மூக்கு கறுப்படைந்து மரணம் நிகழும். இரத்தம் நஞ்சாகி நியூமோனியா ஏற்படக்கூடும்.
- சிகிச்சை: நோய் எதிர்ப்பு மருந்துகளை வழங்குதல்.
- மரணம்: ஒரு மில்லியன், இன்று வருடத்திற்கு 2000 அளவில்.



இந்நோயின் அறிகுறி உடல் கருமை நிறம் அடைதலாகும்.

## தொழுநோய்





கி.பி 1500 இல் இந்த நோய் ஐரோப்பாவில் இருந்து முற்றாக ஒழிக்கப்பட்டபோதிலும் பல நாடுகளில் பரவலாக தற்போதும் காணப்படுகிறது. தென் அமெரிக்காவில் வேட்டையாடப்பட்ட ஆர்மடில்லோக்களினால் தொழுநோய் ஏற்படுவதாக 2011 இல் கண்டறியப்பட்டுள்ளது. படிம எச்சமாகிய தொழுநோய் DNA ஊடாக பக்றீரியா 700 ஆண்டுகள் மாறாமல் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.



- பக்றீரியா: மைக்ரோபெக்றீரியம் லெப்ரே.
- நிலவும் காலம்: 6 ஆயிரம் ஆண்டுகள்.
- நோய் அறிகுறிகள்: முகம், கை கால்களில் தடித்த தழும்புகள் ஏற்படும். விரல்கள் கழன்றுவிழும். தீவிரமடைந்த நிலையில் உடல் உறுப்புகள் பாதிப்புறும்.
- சிகிச்சை: நோய் எதிர்ப்பு மருந்துகள் வழங்கப்படல்.

## கொலரா



அண்மைக்காலத்தில் மிகவும் மோசமான கொலரா, வயிற்றோட்ட நோய் ஹைட்டியில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியிருந்தது. 2010 இல் அங்கு நிகழ்ந்த பூமியதிர்ச்சியின் பின்பே இந்த பாதிப்பு ஏற்பட்டது. கி.பி 1800 முதல் கொலரா நோய் குடிநீரினால் பரவுகின்றது என்றும் அது ஏழு தொற்றுக்களை உள்ளடக்கியது என்றும் இனங் காணப்பட்டுள்ளது.

1849 இல் ஏற்பட்ட கொலரா மரபணு தொடர்பாக குடலில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளைக் கொண்டு விஞ்ஞானிகள் ஆய்வுகளில் ஈடுபடுகின்றனர்.






- பக்றீரியா: விப்ரியோ கொலரே
- நிலவும் காலம்: 5000 ஆண்டுகளாக தொடர்கின்றது.
- நோய் அறிகுறிகள்: வாந்தி மற்றும் வயிற்றோட்டம் தீவிரமடையும். உடலில் அதிக நீர் இழப்பு ஏற்பட்டு மரணம் சம்பவிக்கும்.
- சிகிச்சை: இழக்கப்படும் நீரை மீண்டும் உடலுக்கு ஏற்றல்.
- மரணம்: 1800 முதல் 40 மில்லியன் மரணங்கள் நிகழ்ந்தது. வருடாந்தம் ஒரு லட்சம் மரணங்கள் நிகழுகின்றன.

## காசநோய்



நோய் எதிர்ப்பு மருந்துகள், தடுப்பூசிகள் மற்றும் சிறந்த வாழ்க்கைத் தரம் காரணமாக இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் மேற்கத்தேய நாடுகளில் காசநோய் முற்றாக ஒழிக்கப்பட்டது எனினும், தற்போது காசநோய் மீண்டும் தலைத்தூக்கியுள்ளது. படிம எச்சமாகியுள்ள மரபணுக்களின் மூலம் நோய் எவ்வாறு உருவானது என்பது குறித்து விஞ்ஞானிகள் ஆய்வுசெய்து வருகின்றனர். இதனூடாக புதிய தடுப்பு மருந்துகளையும், சிகிச்சை முறைகளையும் கண்டறிவதே இதன் நோக்கமாகும்.



- பக்றீரியா : மைக்ரோபக்றீரியம், டியுபர்கியூலோசிஸ்
- நோய் அறிகுறிகள்: இருமல், சிலவேளைகளில் இரத்தம் வெளியேறல், இரவில் வியர்த்தல், காய்ச்சல், உடல் எடை குறைதல்.
- சிகிச்சை: நோய் எதிர்ப்பு மருந்துகளை வழங்குதல்.
- மரணம்: தொற்றுக்குள்ளானவர்கள் 2 மில்லியனுக்கும் அதிகமானோர். இன்று ஆண்டுக்கு 1.3 மில்லியன் மக்கள் இந்நோயினால் இறக்கின்றனர்.

## எபோலா வைரஸ்





1976 இல் முதன்முதலில் அறியப்பட்ட எபோலா வைரஸ் மிகவும் மோசமான ஆட்கொல்லி தொற்றுநோயாக உருவெடுத்து கடந்த ஆண்டு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது. தற்போது 13 ஆயிரத்திற்கும் அதிகமான நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். 7,500 இற்கும் அதிகமானோர் இறந்துள்ளனர்.



பழங்களை உண்ணும் ஒருவகை வெளவால் இனம் இந்த வைரஸினை பரப்புகின்றது.

## பறவைக் காய்ச்சல்

வைரஸ்களிலேயே மிகவும் மோசமான வைரஸாக பறவைக் காய்ச்சலைக் கருதமுடியும். 1918 முதல் 1920 வரையிலான காலப்பகுதியில் 50 முதல் 100 மில்லியனுக்கு இடைப்பட்ட மக்கள் இந்த காய்ச்சல் காரணமாக இறந்தனர்.



நல்ல நிலையில் உள்ள அலஸ்கா பகுதி பிரேதம் ஒன்றின் மரபணுக்களைப் பயன்படுத்தி வைரஸ் தொடர்பான விஞ்ஞான ரீதியிலான ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.



கோழிகள் பறவைக் காய்ச்சலின் காவிகளாகும்.

- வைரஸ் H5N1 காய்ச்சலாகும்.
- நிலவும் காலம்: பண்டையகால தொற்று பற்றி அறிய வந்த காலம் கி.பி. 1500.
- நோய் அறிகுறிகள்: கடும் காய்ச்சல், தசைகள் மற்றும் மூட்டுக்களில் வேதனை, காய்ச்சல் மற்றும் நுரையீரல் அழற்சி, நியூமோனியா.
- மரணம்: உலகம் முழுவதும் 500 மில்லியன் மக்களுக்கு தொற்றியது. அதில் 50 முதல் 100 மில்லியன் மக்கள் மரணமடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் ஆசிரியைக்கும் மாணவர்களுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

ගුරුතුමිය: **ළමයි! ලබන මාසේ ක්‍රීඩා උත්සවය පැවැත්වෙනවා.**
ளமாய்! லபன மாசே க்ரீடா உத்சவய பெவெத்வெனவா.
ஆசிரியை: **பிள்ளைகளே! வருகிற மாதம் விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ளது.**

අමල්: **කවදා ද ටීචර් තියෙන්නේ?**
கவதா த டீச்சர் தியென்னே?
அமல்: **எப்போது உள்ளது டீச்சர்?**

ගුරුතුමිය: **ලබන මාසේ අග. විදුහල්පතිතුමා ඒ ගැන කියයි.**
லபன மாசே அக. விதுஹல்பதிதுமா ஏ கென கியய்.
ஆசிரியை: **வருகிற மாதம் இறுதியில். அதிபர் அதைப் பற்றிக் கூறுவார்.**

සුනිල්: **පුහුණුවීම්වලට සවස අපට ඉන්න වෙයිද ටීචර්?**
புஹுணுவீம்வலட்ட சவச அபட்ட இன்ன வெய்த டீச்சர்?
சுனில்: **பயிற்சிகளுக்குப் பின்னேரம் தங்க வேண்டுமா டீச்சர்?**

ගුරුතුමිය: **ඔව්, ඉන්න වෙනවා. සෑම ළමයෙක්ම ක්‍රීඩාවලට සහභාගි වෙන්න ඕනේ.**
ஒவ், இன்ன வெனவா. சேம ளமயெக்ம க்ரீடாவலட்ட சஹபாகி வென்ன ஓனே.
ஆசிரியை: **ஆம், இருக்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் விளையாட்டுக்களில் பங்குபற்ற வேண்டும்.**

අමල්: **ටීචර්, මොන මොන ක්‍රීඩා ද තියෙන්නේ?**
டீச்சர், மொன மொன க்ரீடா த தியென்னே?
அமல்: **என்ன என்ன விளையாட்டுக்கள் இருக்கின்றன டீச்சர்?**

ගුරුතුමිය: **දිවීම, උස පැනීම, දුර පැනීම, කවපෙත්ත විසිකිරීම, පාපන්දු තරඟ, අත් පන්දු තරඟ, ක්‍රිකට්.**
திவீம, உஸ பெனீம, துர பெனீம, கவபெத்த விசிகிரிம, பாபந்து தரங்க, அத்பந்து தரங்க, கிரிக்கெட்.
ஆசிரியை: **உயரம் பாய்தல், நீளம் பாய்தல், பரிதிவட்டம் வீசுதல், கால்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிரிக்கெட்.**

**ඔයාලා නිවාස නායකයාත් එක්ක කතා කරගෙන සහභාගි වෙන්න.**
ஓயாலா நிவாச நாயகயாத் எக்க கதா கறகென சஹபாகி வென்ன.
**நீங்கள் இல்லத் தலைவர்களுடன் கலந்து பேசி பங்குபற்றுங்கள்.**

සුනිල්: **ටීචර්, අපේ ක්‍රීඩා පිට්ටනියේද තරඟ පැවැත්වෙන්නේ?**
டீச்சர், அப்பே க்ரீடா பிட்டனியேத தரங்க பெவெத்வென்னே?
சுனில்: **டீச்சர், எங்களுடைய மைதானத்திலா போட்டிகள் நடைபெறுகின்றன?**

ගුරුතුමිය: **නැහැ සුනිල්, අපේ පිට්ටනිය පොඩිනේ. නගර සභා පිට්ටනියේ තමා තියෙන්නේ.**
நெஹெ சுனில், அப்பே பிட்டனிய பொடினே. நகர சபா பிட்டனியே தமா தியென்னே.
ஆசிரியை: **இல்லை சுனில், எங்களுடைய மைதானம் சிறியது தானே. நகரசபை மைதானத்தில்தான் நடைபெறுகிறது.**

අමල්: **හෙට ඉඳලම සවස ඉන්න ඕනේද ටීචර්?**
ஹெட்ட இந்தலம சவச இன்ன ஓனேத டீச்சர்?
அமல்: **நாளையில் இருந்தே பின்னேரம் இருக்க வேண்டுமா டீச்சர்?**

ගුරුතුමිය: **නැහැ. අද දහවල් 12.30ට නිවාසවල රැස්වීමක් තියෙනවා. එතනදී ඔයාලට කියයි.**
நெஹெ. அத தஹவல் 12.30ட்ட நிவாசவல ரெஸ்வீமக் தியெனவா. எதனதி ஓயாலட்ட கியய்.
ஆசிரியை: **இல்லை, இன்று நண்பகல் 12.30 மணிக்கு இல்லங்களின் கூட்டம் நடைபெறவுள்ளது. அங்கு உங்களுக்கு கூறுவார்கள்.**



### பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக.**

1. ........... උත්සවය පැවැත්වෙනවා.
2. මොන ක්‍රීඩා ද ...................?
3. අත් පන්දු තරඟ, ..................




**Have to** எனும் வினைச்சொல்லுடன் ஏதாவதொரு மூல வினைச்சொல்லை (Stem Verb) கையாண்டு அமைக்கப்பட்ட வினா வாக்கியம், உடன்பாடு வாக்கியம் மற்றும் எதிர்மறை வாக்கியம் ஆகிய மூன்றையும் மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) Do you have to collect any donations?
நீ நன்கொடைகள் ஏதேனும் சேகரிக்க வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

✱ **இதே வினா வாக்கியத்தைப் பின்வருமாறு வேறு விதமாகவும் அமைக்கலாம்.**

ஆ) Have you got to collect any donations?
நீ நன்கொடைகள் ஏதேனும் சேகரிக்க வேண்டியுள்ளதா?

இ) Yes, I have to collect some donations.
ஆம், நான் கொஞ்சம் நன்கொடைகள் சேகரிக்க வேண்டியுள்ளது.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

ஈ) No, I don't have to collect any donations.
இல்லை, நான் எதுவித நன்கொடைகளும் சேகரிக்க வேண்டியதில்லை.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

✱ Do you have to collect?
நீ சேகரிக்க வேண்டியுள்ளதா?

✱ Have you got to collect?
நீ சேகரிக்க வேண்டியுள்ளதா?

✱ Yes, I have to collect. (Affirmative)
ஆம், நான் சேகரிக்க வேண்டியுள்ளது. (உடன்பாடு)

✱ No, I don't have to collect. (Negative)
இல்லை, நான் சேகரிக்க வேண்டியதில்லை. (எதிர்மறை)

✱———✱———✱———✱

உ) Do we have to be in Kandy tomorrow?
நாங்கள் நாளை கண்டியில் இருக்க வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

ஊ) Have we got to be in Kandy tomorrow?
நாங்கள் நாளை கண்டியில் இருக்க வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

எ) Yes, we have to be in Kandy tomorrow.
ஆம், நாங்கள் நாளை கண்டியில் இருக்க வேண்டியுள்ளது.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

ஏ) No, we don't have to be in Kandy tomorrow.
இல்லை, நாங்கள் நாளை கண்டியில் இருக்க வேண்டியதில்லை.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

✱———✱———✱———✱

அ) Do they have to travel by train?
அவர்கள் ரயில் மூலம்தான் பயணிக்க வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

ஆ) Have they got to travel by train?
அவர்கள் ரயில் மூலம்தான் பயணிக்க வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

இ) Yes, they have to travel by train.
ஆம், அவர்கள் ரயில் மூலம்தான் பயணிக்க வேண்டியுள்ளது.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

ஈ) No, they don't have to travel by train.
இல்லை, அவர்கள் ரயில் மூலம் பயணிக்க வேண்டியதில்லை.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 5978
ர.அபிஷன், சிவநகர், புதுக்குடியிருப்பு.


அங். இல: 5979
த.நதுர்ஷன், நெல்லியடி, கரவெட்டி


அங். இல: 5980
எஸ்.அபிஷேக் தேவர், பாடசாலை வீதி, பூண்டுலோயா.


அங். இல: 5981
எஸ்.சரணிகன், நீர்வேலி தெற்கு, நீர்வேலி.


அங். இல: 5982
ப.அபிலாஷ், உக்குளாங்குளம், வவுனியா.


அங். இல: 5983
ஏ.எம்.ஸஃப்ரான், முத்துவல மாவத்தை, கொழும்பு-15.


அங். இல: 5984
எஃப்.ஜஸ்ரா, சஃபிய்யாவத்த, மாவனல்லை.


அங். இல: 5985
எம்.அதிக், மகா வித்தியாலய மாவத்தை, கொழும்பு-13.


அங். இல: 5986
ஆர்.ஏ.ராகிப்ஷான், திகழி, ஏத்தாலை.


அங். இல: 5987
எ.எம்.றினாஸ், கே.கே.பி.வீதி, கல்முனை-01.

# அசைவூட்டத்தின் அதிசயம்

நாம் தொலைக்காட்சியில் பார்த்து ரசிக்கும் காட்சிகள் அசைவூட்டத்துடன் (Animation) எமது கண்களுக்கு காட்சிப்படுத்தப்படுகின்றன. இதுபற்றிய உண்மை என்ன என்பது தொடர்பான விளக்கம் பலருக்கு தெரியாமலேயே



உள்ளது. அது தொடர்பான சில விடயங்களை இங்கு பார்ப்போம்.

Animation எனப்படும் இந்த அசைவூட்டம் உண்மையாகவே எமது கண்களை ஏமாற்றும் ஒரு வித்தையாகும். கி.பி 130 களில் இந்த அசைவூட்ட அடிப்படையை கிரேக்க வானியலாளரான தொலமி கண்டறிந்தார். இந்த கோட்பாடு பின்னர் பரிணாம வளர்ச்சியடைந்ததன் விளைவாக ஒளி மற்றும் மனித கண் உடற்கூறியல் மற்றும் நடத்தை பற்றிய கண்காணிப்பு மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த அசைவூட்டல் கோட்பாட்டின் அடிப்படை என்னவென்றால், எமது விழித்திரைகள் தாம் காணும் ஒரு காட்சியை 1/10 நொடிகள் தக்க வைத்துக்கொள்கின்றன. அதாவது,



நீங்கள் ஒரு காட்சியைப் பார்த்து முடித்த பின்னரும் ஒரு வினாடியின் பத்தின் ஒரு பங்கு நேர இடைவெளி வரையில் உங்கள் கண்களை விட்டு அந்தக் காட்சி அகல்வதில்லை. அந்த கால இடைவெளிக்குள் அந்த காட்சி தொடர்பான இன்னுமொரு படத்தைப் பார்ப்பீர்களானால், அந்தப் படத்தை நீங்கள் வேறொரு படமாகப் பார்க்காமல், முதல் படத்தின் தொடர்ச்சியாகவே பார்ப்பீர்கள்.

எனவே, ஒரு நொடிக்குள் குறைந்தபட்சம் தொடர்ச்சியான பத்துப் படங்களை எமது விழிகளுக்கு காட்சியளிக்கச் செய்தால், அவற்றை எமது கண்கள் தனித்தனிப் படங்களாக அன்றி ஓர் அசையும் (Animation) படமாக ஏற்றுக்கொள்கின்றது. இந்த நுட்பத்தைக்கொண்டே திரைப்படம் என்ற மாயை உருவாக்கப்பட்டுள்ளது. இதனையே 'FPS' (Frame Per Second) என்கின்றனர். ஒரு நொடிக்கு பத்து சட்டகங்களுக்குக் குறைவாக இருப்பின், அந்தக் காட்சி சீரற்றதாகவும் அதுவே அதிகமானால் காட்சி தெளிவின்றியும் தென்படும்.

உதாரணமாக, கூரை மின் விசிறி (Ceiling Fan) சுழலும் போது காணும் காட்சி. அதாவது, மூன்று அல்லது நான்கு இறக்கைகளைக் கொண்ட கூரை மின் விசிறி சுழலும்போது அவை ஒன்றிணைந்து



ஒரு தட்டு சுழல்வதைப் போன்று தோன்றும். அவ்வாறு தெளிவின்றி தெரிவதற்கான காரணம், ஒரு நொடிக்குப் பத்து சட்டகங்களை விடவும் அதிகமாக இருப்பதுதான்.

# தெரிந்து கொள்வோம்

* தமிழ் இலக்கியப் பண்பை திசை திருப்பியவரும் 'மகாகவி' என அழைக்கப்படுபவருமான கவிஞர் யார்?



மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

* பரதம் என்பதற்கான அர்த்தம் என்ன?

ப - பாவம் ர- ராகம் த- தாளம்

* இலங்கையின் தேசிய விளையாட்டு கரப்பந்தாட்டம் போல பின்வரும் நாடுகளின் தேசிய விளையாட்டுக்களை குறிப்பிடுக?

i. ஜப்பான் - சுமோ
ii. ஸ்பெய்ன் - காளைச்சண்டை
iii. துருக்கி - எண்ணெய் மல்யுத்தம்
iv. கெனடா - பனி ஹொக்கி




* 'The Prince' என்ற நூலின் ஆசிரியர் யார்?

மெக்கியவல்லி



* முதன்முதலில் நினைவுத்தபால் முத்திரையை வெளியிட்ட நாடு எது? எப்போது?

ஐக்கிய அமெரிக்கா 1893 இல்

* இலங்கையில் மிகவும் குறுகிய காலம் பதவி வகித்த பிரதமர் யார்?



விஜயானந்த தஹநாயக்க 1959-1960

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தை இங்கே ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..........................................

முகவரி: ..........................................

..........................................

பாடசாலை: ..........................................


வகுப்பு: ..........................................

திகதி: ..........................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

# ஹிரோஷிமா நகரம் பற்றி...




உலகில் முதன் முறையாக அணுகுண்டு வீசப்பட்ட ஜப்பானிய நகரம் ஹிரோஷிமா Hiroshima ஆகும். இது ஜப்பானின் ஹான்ஷூ தீவில் ஹிரோஷமா வளைகுடாவில் அமைந்துள்ளது. ஹிரோஷிமா அதே பெயர் கொண்ட ஜப்பானின் மாநில தலைநகர் ஆகும். கி.பி. 1594 ஆம் ஆண்டு ஒட்டா (Ota) ஆற்று கழிமுகத்தில் கோட்டை நகரமாக அமைக்கப்பட்டு தற்போது பெரும் தொழில் நகரமாக விளங்குகிறது. இங்கு பாயும் நதி இந்த நகரை ஆறு தீவுகளாகப் பிரிக்கிறது. தீவுகள் அனைத்தையும் பல பெரும் பாலங்கள் இணைக்கின்றன. ஹிரோஷிமா நகர் வாகன உற்பத்தியில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. மாஸ்டா Mazda கார் தயாரிப்பு நிறுவனம் இந்நகரின் மொத்த உற்பத்தியில் 32 சதவிகித இடத்தைப் பெறுகிறது. இங்கிருந்து பல வகையான கார்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்நகரம் பெரும் துறைமுக நகராகவும் விளங்குகிறது. இங்கு மிகப் பெரிய சர்வதேச விமான நிலையம் ஒன்று அமைந்துள்ளது. இரண்டாம் உலகப் போரின்போது, இந்நகரின் மக்கள் நிறைந்த பகுதியில் அமெரிக்கா அணுகுண்டை வீசியது. இதனால், ஏறத்தாழ 130,000 பேர் கொல்லப்பட்டனர். லட்சக்கணக்கானோர் படுகாயமடைந்தும் போயினர்.

ஆர்.ரிஸ்லா, கு/ஹிஸ்புல்லா ம.கல்லூரி.

# இலங்கையில் பிரசித்தி பெற்ற இடங்கள்



| | |
|---|---|
| அம்பலாங்கொடை | - முகமூடி |
| யாழ்ப்பாணம் | - பனை |
| மல்வானை | - ரம்புட்டான் |
| களுத்துறை | - மெங்குஸ்தான் |
| அம்பாந்தோட்டை | - உப்பு |
| கந்தளாய் | - சீனி |
| கம்பஹா | - வெற்றிலை |
| நுவரெலியா | - தேயிலை |
| கிந்தொட்டை | - ஒட்டுப்பலகை |
| களனி | - டயர் உற்பத்தி |

எஃப்.ரிஸா[illegible] கண்டி.




# ஐக்கிய நாடுகள் சபை

ஐக்கிய நாடுகள் சபை 1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இதில் 51 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர். இதன் தலைமையகம் நியூயோர்க்கில் அமைந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் கொடி வெளிர்நீல நிறமாகும். இதில் வளைவான ஒலிவ் மரக்கிளைகளுக்கிடையில் உலகப்படம் பொறிக்கப்பட்டிருக்கும். ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் அலுவலக மொழிகள் ஆங்கிலம், பிரெஞ்சு, சீனமொழி, ரஷ்ய மொழி, அரேபிய மொழி மற்றும் ஸ்பேனிஷ் மொழிகளும்

United Nations



பொதுச்சபை, பாதுகாப்புச்சபை, பொருளாதார சமூக அமைப்பு, சர்வதேச நீதிமன்றம், தலைமைக்காரியாலயம் ஆகிய பகுதிகளையும் கொண்டுள்ளது. உலகத்தில் அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டி அனைத்து நாடுகளுக்கிடையேயும் நல்லுறவை வளர்க்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கு நாம் தலை வணங்குவோம்.

உ.பவனிதன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.



# ரோஜா

சின்னச் சின்ன ரோஜா
சிவப்பு நிற ரோஜா
கண்ணைக் கவரும் ரோஜா
பஞ்சு போன்ற ரோஜா
பட்டுப் போன்ற அழகு
விஞ்சும் நல்ல வாசம்
அழகாய் பூத்துக் குலுங்கும்
கொஞ்சி நானும் மகிழ்வேன்

எம்.எஸ்.எஃப்.பஜீலா, மேர்ஸி கல்வி வளாகம், மதுரங்குளி.

# உயிரை வருத்தாதே!





ஓர் ஊரில் விமல் என்றொருவன் இருந்தான். ஒருநாள் அவன் பாடசாலை விட்டு வரும்பொழுது ஒரு மரத்தில் கிளியொன்று இருந்தது. அதன்மீது அவன் கல்லொன்றை எறிந்தான். கல் அதன்மீது பட்டதால் அது வலியால் கத்திக் கொண்டு பறந்தது. விமல் கைதட்டி சிரித்து விட்டு சிறிது தூரம் சென்றான். வழியில் நாய் ஒன்று தூங்கிக் கொண்டிருந் தது. அதற்கும் ஒரு கல்லை எடுத்து எறிந் தான். அது விழித்து விமலைத் துரத்த ஆரம்பித்தது. விமல் கால் கடுக்க ஓடினான். நாயும் துரத்திக்கொண்டே வந்தது. விமல் பின்னால் பார்த்தபடி ஓடியதால் வீதியில் கிடந்த முள்ளுக் கம்பி ஒன்று அவனது காலைப் பதம் பார்த்தது. இதனால், அவன்மிகுந்த வலியுடன் மெதுவாக தனது வீட்டை நோக்கி வந்தான். அவனது காயத்தைப் பார்த்த தாய் கலங்கிய முகத்துடன் ஓடோடி வந்து, "என்ன நடந் தது?" என்று கேட்டாள். விமலும் நடந்தவற்றைக் கூறினான். அவனது அம்மா, "நீ அந்தக் கிளியை கல்லால் அடித்ததால்தான் இறைவன் உனக்கு இத்தண்டனையை தந்துள்ளான். இனிமேல் உயிர்களை வதைக்காதே. அன்பாக இரு" என்றார். விமலும் தனது தவறை உணர்ந்து அன்றுமுதல் உயிர்களிடத்தில் அன்பு காட்டத் தொடங்கினான்.

எம்.எம்.முஹம்மத், க/அல்ஹார் கல்., அக்குறணை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 121

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 |
| | ■ | | ■ | 4 | |
| | ■ | | ■ | 5 | |
| | | | 6 | ■ | ■ |
| ■ | ■ | | ■ | 7 | |
| 8 | | | | ■ | 9 |

### மேலிருந்து கீழ்

1. கற்றவற்றை மீண்டும் கற்றல்.
2. மண்ணால் செய்யப்பட்ட பாத்திரங்கள் இவ்வாறு அழைப்பர்.
3. 2004 ஆம் ஆண்டு டிசம்பரில் இலங்கையில் பாரிய சேதங்களை ஏற்படுத்திய இயற்கை அனர்த்தம்.
5. பூட்டைத் திறக்கத் தேவைப்படுவது. (தலைகீழ்)
9. விடுகதை. (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

1. கப்பல் ஓட்டுபவன்.
4. கேள்வி.
5. கடவுளை இப்படியும் அழைப்பர்.
6. ஒருவகை தின்பண்டம். (மாறியுள்ளது)
7. மின்னலுடன் சேர்ந்தே வருவது.
8. துருப்பிடிக்கும் உலோகமொன்று.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.120 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | ர | 2 வ | ம் | ■ | 3 அ |
| 4 மு | டு | ர | ■ | 5 மூ | ளை |
| 6 த | 7 க | ப் | 8 ப | ன் | ■ |
| சு | ■ | 9 பு | ற் | று | ■ |
| ர | ■ | ■ | று | ■ | 10 உ |
| பி | ப் | 11 சீ | ■ | 12 ஆ | மை |




'நடராஜ் அறிவுக்கு விருந்து' பகுதியிலுள்ள 1, 2, 3 ஆகிய போட்டிகளுக்கான விடைகளை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி 04.02.2015 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

நடராஜ் அறிவுக்கு விருந்து - 61
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

பரிசுப் பொதி
1ஆம் பரிசு ரூ. 700/=
2ஆம் பரிசு ரூ. 500/=
3ஆம் பரிசு ரூ. 300/=



நடராஜ் அறிவுக்கு விருந்து போட்டிகளுக்கான விடைகளை அனுப்பும்போது, உங்கள் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை, நகரம் என்பனவற்றை கட்டாயம் எழுதி அனுப்புங்கள்.

## 2

A படத்தை அவதானித்து, B படத்திலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக

A


B



Sponsored by
NATARAJ®
Packsco Ceylon (Pvt) Ltd, P.O Box-165, Colombo-03

## 1

படம் 'அ' இல் நடுவிலுள்ள எழுத்து முதலில் வரும் வகையிலும், படம் 'ஆ' இல் நடுவில் உள்ள எழுத்து கடைசியில் வரும் வகையிலும் இங்குள்ள ஏனைய எழுத்துக்களைப் பயன்படுத்தி நான்கு சொற்களை அமைக்க.

அ)




ஆ)



## 3

எண்ணிக்கைக்குப் பொருத்தமான படத்தொகுதியுடன் இணைக்க


| |
|---|
| 3 |
| 4 |
| 5 |
| 6 |
| 7 |
| 8 |



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### நடராஜ் அறிவுக்கு விருந்து - 59 விடைகள்

போட்டி: 01




### நடராஜ் அறிவுக்கு விருந்து - 59 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1ஆம் பரிசு
எஸ்.சகீன், திகன.

2ஆம் பரிசு
ஆர்.ஷபனா, மட்டக்களப்பு.

3ஆம் பரிசு
எம்.நுஹறா, கல்பொக்க.

பாராட்டுப் பெறுவோர்:

- எஃப்.சம்ஹா, வாழைச்சேனை.
- எம்.ஜுஹைத், மாஞ்சோலை.
- சீ.பவானி, முள்ளிப்பொத்தானை.
- என்.கமலேஷ், ரத்தொட்டை.
- ஆ.றிவ்வியன், மன்னார்.
- எம். அம்ஹர், வெலிகம.
- தி.லக்ஷிதா, நீர்கொழும்பு.
- எஃப்.ஹனான், நிட்டம்புவ.
- ச. மோஷிகா, எட்டியாந்தோட்டை.
- எம்.பவாஸ், பேருவளை.

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



குருணாகல் ஹொரம்பாவையைச் சேர்ந்த ஜெஸ்மீர்-பர்சானா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹம்மட் அம்ஜத், தனது ஒன்பதாவது பிறந்தநாளை 29.01.2015 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

# பேய்கள் உள்ளனவா...?

## அறிவியல் கருத்துக்கள்



பேய், பூதம், பிசாசு, ஆவி எனும் மூட நம்பிக்கைகள் நம் நாட்டில் மட்டுமல்ல வேறு பல நாடுகளிலும் உள்ளன. பகுத்தறிவு பூர்வமாகவும், தர்க்கரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் பேய், பிசாசுகள் பற்றிய ஆய்வுகளும் தொடர்ந்தவண்ணமே உள்ளன.

எனினும், சாவின் விளிம்பில் ஏற்படும் அனுபவங்கள், பேய்கள், மரணத்திற்குப் பின் வாழ்வு, ஆவி உலகத் தொடர்பு உட்பட, இவை தொடர்பான வேறு பல விடயங்களும் இயற்கைக்கு மாறான நம்பிக்கைகளாகவே கருதப் படுகின்றன. இறந்தவர்கள் ஆவியாக நம்முடன் இருக்கிறார்கள் என்பதும் ஒரு பழைய நம்பிக்கையாகவே உள்ளது.

ஆனால், இவை தொடர்பாக உலகமே ஏற்றுக்கொள்ளும் அறிவியல்பூர்வமான ஆதாரங்கள் இதுவரை இல்லை. சிலர் பேய்கள் இருப்பதாகக் கருதி உயர்ந்த அறிவியல் கருவிகளையும், கதிர் இயக்கத்தைக் கண்டுபிடிப்பதற்கான கருவி, மின்காந்த நில கண்டுபிடிப்பான்கள், அயன் கண்டுபிடிப்பான், இன்ஃப்ராரெட் (Infrared) கெமராக்கள், மிக நுண்ணிய மைக்ரோபோன் போன்றவற்றைப் பயன்படுத்தி ஆராய்ந்தனர். இந்த ஆய்வுகளிலும் எவ்விதமான பிரயோசனமும் இருக்கவில்லை. எது எவ்வாறு இருப்பினும் புத்திசாலிப் பூதங்கள், நிழல் மனிதர்கள், தேவதைக் கதைகள், டிரகன் கதைகள், விதம் விதமான பேய் பிசாசுக் கதைகள், பேய் வீடுகள் தொடர்பான கற்பனைக் கதைகள் சிறுவர் சிறுமியரை மிக இலகுவாகவே கவர்ந்துவிடுவதுடன், அவர்கள் இத்தகைய கதைகளை மிகத் தீவிரமாக வாசிக்கவும் முனைகின்றனர்.




எம்.ருகையா,
சாஹிரா தே.ஆ.பாட., வத்தளை.

கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ச.நந்தினி,
கம்மடுவ த.ம.வித்., ஒப்பல்கல.



எஃப்.யெமீனா,
அல்-மதீனா ம.வித்., மாஹோ.




ஆர்.துவாஹரணி,
மா/இ.இந்து.மகா.வித்.,



எம்.ரியாசத்,
சிலா/அல்ஹிரா மு.ம.வித்.,
கொட்டாரமுல்லை.




ம.டிலக்ஷன்,
கொக்குவில் இந்.கல்., கொக்குவில்.



எஸ்.கௌசிக்கா,
அப்புத்தளை த.ம.வித்.,
அப்புத்தளை.

## புலமைப்பரிசில் விடைகள்

(ஜனவரி 21 ஆம் திகதி வெளியான வினாக்களுக்கான விடைகள்)

### தமிழ்

01) 1. குருவி, சாரைப்பாம்பு. 2. மரக்கிளையில்
3. காய்ந்த மரக்கொப்பு 4. அங்கும் இங்கும்
5. குருவியை கவ்விப் பிடித்துக்கொண்டது
6. குருவி/சாரைப்பாம்பு 7. 1. கீழ் 2. குறுகிய

02) 1. மோகன் குளங்கள் பற்றிய கதைகள் பலவற்றை சேகரித்தான்.
2. பாதையைக் கடக்க எப்போதும் மஞ்சள் கோட்டையே பயன்படுத்துவோம்.

03) 1. பரிசளிப்பு 2. முயற்சி 3. ஆராய்ச்சி

04) 1. தாமரை 2. மருந்து 3. சித்தி/சின்னம்மா
4. தீர்மானித்தல் 5. உங்களுக்கும் 6. காலப்பெயர்
7. பங்குனி 8. தாள் 9. உதவாது 10. சுளை

05) 1. நீர் 2. சொண்டு 3. வைத்தியசாலை
4. ஆறு 5. கடல்

06) ஐந்து சொற்களுக்கு குறையாது, கருத்து தெளிவாக வாக்கியம் அமைய வேண்டும்.

07) 1. களஞ்சியம் 2. சரணாகதி 3. சுயசரிதை

# சமூக வளர்ச்சியும் நற்பழக்கங்களும்



ஒரு சமூகத்தில் நேர்மை, பண்பாடு என்பன மிக முக்கியமான விடயமாகக் கருதப்படுகின்றது. சமூக கட்டமைப்பில் சிறுவர்கள் மற்றும் இளைஞர், யுவதிகளிடையே காணப்படும் பண்புகள் மதிப்பிற்குரிய ஒரு சமூகத்தின் அடித்தளமாகவும் அமைகின்றன. அந்தவகையில், பிள்ளைகளிடையே நற்பண்புகள் அவசியமாகின்றன. இந்த நற்பண்புகள் பெரும்பாலும் பெற்றோர்களிடம் இருந்தே கடத்தப் படுகின்றன. இது தவிர மதகுருமார்கள், பெரியோர், ஆசிரியர்கள், நண்பர்கள், சமூக நபர்கள் மற்றும் தரமான நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவற்றில் இருந்தும் பண்புகள் பெறப்படுகின்றன. அந்தவகையில் ஆசிரியர், பெரியோருக்கு மதிப்பளித்தல், கனம்பண்ணுதல், நாணயமாக நடத்தல், உழைத்து நேர்மையாக வாழ்தல் என்பன மிகச் சிறப்பான சமூகத்தில் காணப்படும் பண்புகளில் சில எனலாம்.

ஊழல் செய்பவர், நேர்மை இன்றி வாழ்பவர். ஏமாற்றுபவர், குற்றவாளிகள், பிற மதங்களை மதிக்காதவர்கள் ஒரு சமூகத்தில் உயர் நிலையில் வாழ்தல், அச்சமூகத்தின் பின்னடைவு அல்லது இழுக்கு என்றே கூறலாம். எனவே, நற்பழக்கங்கள், பண்புகள் சமய நம்பிக்கைகள் என்பன ஆரோக்கியமான, பண்பு நிறைந்த ஒரு சமூக உருவாக்கத்திற்கு இடும் வித்தாகவே அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்லாந்து

தென்கிழக்காசியாவில் அமைந்துள்ள தாய்லாந்து ஆரம்பகாலத்தில் 'சீயம்' என்று அழைக்கப்பட்டது. 1932 இல் அந்நாட்டில் அரசியலமைப்புடன் கூடிய முடியாட்சி தோன்றியதோடு, 1938 முதல் 'தாய்லாந்து' என்று பெயர் மாற்றப்பட்டது. அதுவரை அந்நாட்டினுள் நான்கு முடியாட்சிகள் நிலவின. இரண்டாம் உலக யுத்தத்தின்போது தாய்லாந்து ஜப்பான் பக்கம் சாய்ந்தது. பின்னர் 1954 இல் அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது.







# ஏன் எதற்கு?





கேள்வி: நீதிமன்றம், பாடசாலை மற்றும் வைத்தியசாலைகளின் அருகாமையில் வாகனங்கள் ஒலி எழுப்பத் தடை செய்யப்பட்டுள்ளமைக்கான காரணம் என்ன?

பதில்: வாகன ஒலிகள் ஒரே விதமானவை அல்ல. சில ஒலிகள் உச்சஸ்தாயி கொண்டதாக இருக்கும். சில ஒலிகளின் அலைகள் குறைவாக இருக்கும். அதிகளவு ஒலி அலைகள் மனிதனுக்கு தீங்கு விளைவிக்கின்றன. குறிப்பாக, செவிப்பறைகளுக்கு இதனால் பாதிப்பு ஏற்படுகின்றது. அத்துடன், பாடசாலை, நீதிமன்றம், வைத்தியசாலை ஆகியவற்றில் நிலவும் அமைதிக்கு இச்சத்தங்கள் குந்தகம் விளைவிக்கின்றன. இதனால், இவ்வாறான இடங்களின் அருகாமையில் ஒலி எழுப்புவது சட்டத்தின் மூலம் தடை செய்யப்பட்டுள்ளது.





கேள்வி: பண்டிகைக் காலங்களின்போது தொங்கவிடப்படும் பலூன்கள் சிலவேளைகளில் வெடிப்பது ஏன்?

பதில்: பலூனை ஊதும்போது, அதிகளவான வாயு துணிக்கைகள் அந்த பலூனுக்குள் செல்வதனால் இறப்பர் இழுபட்டு அதிகளவு வாயு துணிக்கைகள் அதனுள் சேர்கின்றன. அதன் வாய்ப்பகுதியினை கட்டி வெளியில் தொங்கவிடும்போது, சூரிய ஒளி அதன்மீது விழுந்து பலூன் சூடாகின்றது. இதனால், அதனுள் உள்ள வாயுவும் சூடாகி விரிவடைகின்றது. இதன்படி, பலூன் அதிகபட்சம் இழுபட்டு இறுதியில் வெடித்து விடுகின்றது.





கேள்வி: உடல் சார்ந்த அதிக வேலைகளின்போதும், ஓடும் போதும் இதயத்துடிப்பு அதிகரிப்பது ஏன்?

பதில்: அதிக உடல் வேலைகளின்போதும் ஓடும்போதும் உடல் தசைகள் தூண்டப்பட்டு அதிகம் இயங்குகின்றன. இதற்காக, மேலதிக சக்தியினை விரயமாக்க வேண்டியுள்ளது. உடலுக்கு சுவாசமே சக்தியை வழங்குகின்றது. அதிகம் சக்தியை வழங்குவதற்கு குறிப்பிட்ட கலங்களுக்கு அதிகளவு குளுக்கோசும் ஒட்சிசனும் தேவையாகும். இந்த பதார்த்தங்களை கலங்களுக்கு குருதி எடுத்துச் செல்வதனால் சுவாசத்தின் வேகத்தினை அதிகரிக்க குருதிச்சுற்றோட்டமும் அதிகரிக்கப்படல் வேண்டும். இதற்கு குருதிச்சுற்றோட்டத்தினை உடலெங்கும் பாய்ச்சும் கருவியான இதயம் வேகமாக துடிக்க வேண்டும்.



## சித்திரப் போட்டி முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது...!

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் விதிப் போக்குவரத்து பாதுகாப்பு என்ற தொனிப்பொருளில் நடத்தப்படுகின்ற சித்திரப் போட்டியின் போட்டி முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது. கூடிய விரைவில் உங்கள் சித்திரங்களை கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,
241, பார்க் வீதி, கொழும்பு 05.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கயிற்றின் உதவியுடன் மலை ஏறுவோம்!



## விஜய் சாரணர் உலகம்

சிறு மலையை ஏறிக் கடப்பதற்கு கயிறு தேவைப்படாத போதிலும் சரிவுகள் கொண்ட உயரமான மலையினைக் கடப்பதற்கு ‘மலை ஏறுபவரின் கயிறு’ அவசியமாகும். மலை ஏறும் கயிறு இருந்தால் மாத்திரம் மலை ஏற முடியாது. அதற்கும் மேலான பல உபகரணங்கள் அவசியமாகும். இங்கு குறிப்பிடப்படும் அனைத்து உபகரணங்களையும் சரியான முறையில் பயன்படுத்தும் வழிமுறைகளை நீங்கள் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் மலை ஏறும் செயற்பாட்டினை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.





## Carabiner மற்றும் மலை ஏறுபவர்கள்

விளையாட்டு நோக்கத்திற்காக மலை ஏறும் வழக்கத்தினைக்கொண்ட விளையாட்டு வீரருக்கு **Carabiner** எனும் உபகரணம் இன்றியமையாததாகும். அது ஒரு கொக்கியின் வடிவத்தினைக் கொண்டதாகும். அதன் பௌதீக வடிவம் அதிக எடையையும் தாங்கும் சக்தியினை அதற்கு வழங்குகின்றது. மலை ஏறுபவரின் உயிரைப் பாதுகாத்து அவரது உடல் எடையினை தாங்கும் உபகரணமாக **Carabiner** திகழ்கின்றது.


## மலை ஏறுபவரின் உபகரணங்கள்


மலை ஏறும் உங்களிடம் கீழ்வரும் உபகரணங்கள் இருக்க வேண்டியது அவசியமாகும். அவற்றைத் துருப்பிடிக்காமல் பாதுகாப்பது உங்கள் கடமையாகும். அத்துடன், மலை ஏறும்போது பயன்படுத்தும் தலைக்கவசம், கையுறைகள் மற்றும் பொருத்தமான காலணிகள் என்பன மலை ஏறும் உங்களின் உயிரினைப் பாதுகாக்கும் எனலாம்.




## காப்பு கவசம் (Harness)








காப்பு கவசமானது, குறுகிய காற்சட்டை வடிவத்தினைக் கொண்டது. Carabiner கள் சில அதில் பொருத்தப்பட்டிருக்கும். மலை ஏறுபவரின் கயிறு அதனூடாக செல்ல வேண்டும். அதற்கும் அங்கீகரிக்கப்பட்ட தரம் ஒன்று உள்ளது. அதற்கு பின்வரும் முறைகளைப் பயன்படுத்த வேண்டும்.

மேற்காட்டப்பட்ட A B C முறைகளைப் பயன்படுத்தி மலை ஏறுவதனை ஆரம்பிக்க முடியும். மலை ஏறுபவர் தனது கயிற்றினை சரியான முறையில் அசைத்து மேல்நோக்கி இழுக்கவேண்டும். மலை ஏறுபவரின் கால்கள் மற்றும் கைகள் சரியான அசைவுகளைப் பின்பற்றும்போது மலை ஏறுவது இலகுவாக இருக்கும்.



கவனத்திற்கொள்க: காப்பு கவசத்திற்கு அருகில் உயிர் பாதுகாப்பு கயிற்றினால் மலை ஏறுபவரை தொடர்புபடுத்தி வைத்திருக்க வேண்டும்.

## Carabiner இன் பகுதிகள்

Carabiner காப்பு கவசம், வாயில், மயிரிழைகள் மற்றும் வளைவு என்பன அவசியமாகும். அதனை சரியான முறையில் பயன்படுத்தாவிட்டால் ஆபத்து நிகழும். Carabiner இற்கு சுமையை ஏற்றினால் அதன் பகுதிகள் சிதைந்துவிடக்கூடும்.

## Carabiner ஐ எவ்வாறு பயன்படுத்தலாம்




Carabiner இன் விரிந்த பகுதிகளை மேல்நோக்கியும், குறுகிய பகுதிகளை கீழ் நோக்கியும் வைத்திருக்க வேண்டும். அதன்போது, அதிக நிறையினை அதனால் தாங்கிக் கொள்ள முடியும். ஆனால், இவ்வாறு Carabiner ஐ பயன்படுத்துவதனால் ஆபத்துக்களும் நேரலாம்.

## Carabiner வகைகள்




இலகுவான மற்றும் பலமான உலோகங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் Carabiner பலதரப்பட்ட பெயர்களில் சந்தையில் விற்பனைக்குள்ளது. அவற்றுள் I.S.D. பெற்சல், துட்டு பய், யோக் ஆகிய பெயர்களைக் கொண்டவை தரமானவை என்று முன்னோடிகள் தெரிவித்துள்ளனர். புதிதாக மலை ஏறுபவர்கள் பலம் வாய்ந்ததும் பாதுகாப்பானதுமான Carabiner இனை தெரிவுசெய்துகொள்வது நன்று.


மலை ஏறுபவரின் கயிறு



சப்பாத்து


தலைக்கவசம்


கையுறை


காப்பு கவசம் (Harness)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களை சிமிட்டுவதேன்?






கண் இமைகள் மூடித் திறக்கும் ஒரு வேகமான செயற்பாடே கண் சிமிட்டலாகும். இச்செய்கை சுமார் 400 மில்லி செக்கன்களில் (Milliseconds) நடைபெறுகிறது. இவ்வேகம் சூழ்நிலை மற்றும் உடல் ஆரோக்கியம் போன்ற காரணிகளால் மாறுபடக்கூடும்.

கண் விழிகளில் படிந்திருக்கும் தூசு, துகள்களை அகற்றவும், விழிகளின் ஈரத்தன்மையைப் பேணுவதற்கு மற்றும் கண்களைப் பாதுகாப்பதற்காகவே நாம் கண்களை சிமிட்டுகின்றோம். ஒரு நாளைக்கு சராசரியாக நாம் 15,000 தடவைகள் கண் சிமிட்டுகிறோம். அதாவது, இது ஒரு நிமிடத்திற்கு சுமார் பத்து தடவைகளாகும். விலங்குகளும் கண் சிமிட்டுகின்றன. எனினும், மீன் மற்றும் பூச்சியினங்களுக்கு கண் இமை இல்லை என்பதனால் இவை கண் சிமிட்டுவதில்லை.

## ஓவியம் வரைவோம்

### குரங்கு ஒன்றை வரைவோம்




## செடிப்பேன்களைப் பாதுகாக்கும் தேனெறும்புகள்



அசுவினி அல்லது செடிப்பேன் (Aphid Plant Lice) எனும் பூச்சியினமானது, செடிகொடிகளின் இலை, இலைக்குருத்து, கிளை போன்றவற்றில் கூட்டமாக வாழ்கின்றன. பல நிறங்களில் காணப்படும் இவை,



செடி-கொடிகளில் தங்கி அவற்றின் சாற்றை உறிஞ்சி உணவாகக் கொள்கின்றன. இதன்போது, அவற்றிலிருந்து சுரக்கக்கூடிய தேன் போன்ற இனிய பானத்தை எறும்புகள் உணவாகக் கொள்கின்றன. அதனால், இந்த செடிப்பேன் 'எறும்புப் பசு' எனவும் அழைக்கப்படுகின்றது.

இந்த செடிப்பேன்களை பாதுகாப்பதற்கும் உணவளிப்பதற்கும் தனியொரு எறும்புப் பிரிவே உள்ளது. இவை தேனெறும்புகள் (Honey Ants) என்று அழைக்கப்படுகின்றன. செடிப்பேன்களை எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதும், அவற்றிற்கு உணவளிப்பதும், அவை இடும் முட்டைகளை பாதுகாத்து வைப்பதிலும் தேனெறும்புகள் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்கின்றன. பொதுவாக, குளிர்காலங்களில் அவற்றின் முட்டைகளை பொருத்தமான சீதோஷ்ண நிலை உள்ள இடங்களுக்கு எடுத்துச்சென்று பாதுகாக்கின்றன. அவை



முட்டை பொரிக்கும் காலத்தில் அவற்றை இரை கிடைக்கும் இடங்களுக்கு எடுத்துச்செல்கின்றன.

செடிப்பேன்களுக்கு இறக்கை இல்லாவிட்டாலும் அசாதாரண சூழ்நிலைகளில் அதாவது இனப்பெருக்கம் அதிகமாகி உணவுப் பற்றாக்குறை ஏற்படும் தருணங்களில் இறக்கை முளைத்துப் பறந்து செல்வதுண்டு. ஆனால், தமது உணவு ஆதாரங்கள் கைவிட்டுப்போகக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வில் எறும்புகள் அவற்றின் இறக்கைகளை வெட்டிவிடுகின்றனவாம். மேலும், ஒருவித இரசாயனத்தை உபயோகித்து தாம் வளர்க்கும் செடிப்பேன்களுக்கு இறக்கை முளைக்கவிடாமல் தேனெறும்புகள் தடுப்பதாகவும் அண்மைய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

## உலகின் பிரபல்யமானவர்கள்

# இந்திரா காந்தி



இந்திரா பிரியதர்சினி காந்தி இந்தியாவின் உத்தரப் பிரதேசத்திலுள்ள அலகாபாத்தில் 1917 ஆம் ஆண்டு நொவெம்பர் 19 ஆம் திகதி பிறந்தார். இவர் இந்தியாவின் முதலாவது பிரதமரான ஜவஹர்லால் நேருவின் ஒரே புதல்வியாவார். இந்திரா காந்தி பூனாவிலும், வங்காளசாந்தி நிகெதனிலும் மட்டுமன்றி சுவிற்சர்லாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் கல்வி கற்றவராவார். 1942 இல் இவர் ஃபெரோஸ் காந்தியை மணமுடித்தார். இவருக்கு சஞ்சய் காந்தி, ராஜீவ் காந்தி ஆகிய இரண்டு ஆண் பிள்ளைகள் இருந்தனர். இந்திரா காந்தி 1966 இல் இந்தியாவின் பிரதமரானார்.

இவர் நாட்டில் ஏற்படுத்திய அவசரகால நிலைப்பிரகடனம் 1977 இல் இவருடைய தேர்தல் தோல்விக்குக் காரணமாயிற்று. 1980 இல் அவர் மீண்டும் அதிக பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தார். பாகிஸ்தான் பிரிவினையில் பாகிஸ்தானுக்கு எதிரான யுத்தத்தில் உறுதியாகச் செயல்பட்டு பங்களாதேசம் உருவாக உதவினார். இந்திரா காந்தியின் பதவிக்காலத்தில் ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த 210 அம்சத்திட்டத்தை இவர் கொண்டுவந்தமை மற்றுமொரு சாதனையாகும். அமிர்தசரஸ் பொற்கோயிலினுள் இருந்த தீவிரவாதிகளை அகற்ற இராணுவத்தைக் கோயிலுக்குள் அனுப்ப இந்திரா காந்தி நடவடிக்கை எடுத்தார். இதனால், கோபமடைந்த சீக்கிய ஆயுததாரிகள் 1984 ஆம் வருடம் ஒக்டோபர் 31 ஆம் திகதி இவரை சுட்டுக் கொன்றனர்.

தொகுப்பு: எம்.பஹ்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார கார்ட்டூன் படம்





# உங்களுக்குத் தெரியுமா?



★ உலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட வாசனை, தனிப்பட்ட விரல் ரேகை மற்றும் தனிப்பட்ட நாக்கு முத்திரை என்பன உள்ளன.

★ 60 வயதை அடைந்தவுடன், பெரும்பாலானோரின் நாக்கில் உள்ள சுவைமொட்டுக்கள் பலவீனம் அடைந்துவிடுகின்றன.






★ பிறந்தநாள் வாழ்த்துப் பாடலுக்கு காப்புரிமை (copyright) உள்ளது.



★ எமது இரு கண்களிலும் ஒரு கண் பலமானதாகவும், மற்றைய கண் பலவீனமானதாகவும் இருக்கும்.

★ எந்தவொரு சத்தத்தைக் கேட்கும்போதும் உங்கள் கண் விழித்திரைகள் விரிவடைகின்றன.

★ தீப்பெட்டி கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னரே, சிகரெட் லைட்டர் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது.






★ ஐஃபள் கோபுரத்தின் உயரம், குளிர்காலத்தில் 6 அங்குலங்களால் குறைந்துவிடுமாம்!

★ ஒரு சராசரி கழிப்பறையில் இருக்கும் பெக்டீரியாக்களைவிட, 400 மடங்கு அதிக பெக்டீரியாக்கள் ஒரு சராசரி அலுவலக மேசையில் உள்ளன.





★ ஒளிரும் மின் குமிழை முதன்முதலில் கண்டறிந்தவர் 'ஜோசப் ஸ்வான்' என்ற விஞ்ஞானி ஆவார்.

★ மனித உடலில் இரத்தம் பாயாத ஒரே ஒரு பகுதி கண் விழிவெண்படலம் ஆகும். அதற்குத் தேவையான ஒட்சிசன் காற்றிலிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்ளப்படுகிறது.




★ மனிதனுக்கு உள்ள தசைகளைவிட அதிக தசைகள் கம்பளிப்பூச்சிக்கு உள்ளன.

★ நியூஸிலாந்தின் தேசிய பறவையான 'கிவி' பறவை, வருடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முட்டைகளையே இடும். கிவி பறவையானது, உருவ அளவில் கோழியைப்போல் இருந்தாலும், அதன் முட்டை கோழியின் முட்டையைவிட பல மடங்கு பெரியதாக இருக்கும்.




★ இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட வண்டுகளிலேயே மிக அதிக எடை உள்ளது 'கோலியாத்' எனப்படும் வண்டினம் ஆகும். அதன் எடை சுமார் 110 கிராம்கள். அதாவது, ஓர் அப்பிளின் எடையளவில் காணப்படும்.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2015, ஜனவரி மாதம் 28 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday January 28, 2015.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org